இனிது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 30 புதன்கிழமை 15.08.2018 | கதிர் 283

ஐக்கியம் அல்லது ஒற்றுமை பற்றிப் பேசுவதே ஒருவர் அரசியலில் நிரந்தரம் என்றாகிவிட்டது.

இந்த ஐக்கிய பற்றிய உச்சாடனம் தேர்தல் நெருங்கும் போது தீவிரம் பெறும். தேர்தல் காலத்தில் வாக்குகளைச் சுருட்டுவதற்காகவும் தமது அதிகாரங்களைத் தக்க வைப்பதற்காகவும் பக்கம் 08

## யாழ். பல்கலையிலும் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஓக.15

செஞ்சோலை மாணவிகள் படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்.பல்கலைக் கழகத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. பக்கம் 14

## செஞ்சோலைச் சிறுவர் படுகொலை; நேற்று உணர்வுபூர்வ நினைவேந்தல்



முல்லைத்தீவு, ஓக.15

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2006 ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி இலங்கை வான்படை கிபிர் விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் 54 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் 12ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்று மக்களின் கண்ணீருக்கு மத்தியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. பக்கம் 14

# தமிழ்த் தலைமைகளின் அகந்தையே எமது பின்னடைவுகளுக்குக் காரணம்

## வடக்கு முதல்வர் விக்கி பகிரங்கச் சாடல்



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15

தமிழ்த் தலைவர்களின் தூரநோக்கற்ற சிந்தனைகளும், இறுமாப்புத் தன்மையும், அகந்தையுமே தொடர்ச்சியாக அரசியல் பின்னடைவுகளைச் சந்திக்கக் காரணம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பக்கம் 14

## நாயாறில் வாடிகள் தீ வைப்பு; மூவர் பொலிஸாரால் கைது!



முல்லைத்தீவு, ஓக.15

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பக்கம் 14

## ரவிராஜ் கொலைச் சந்தேக நபர் நேவி சம்பத் கொழும்பில் கைது



கொழும்பு, ஓக.15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பக்கம் 14

## தூக்குத் தண்டனையை ஏற்றுக்கொள்ள முடியாது

### கத்தோலிக்க திருச்சபை அறிவிப்பு

கொழும்பு, ஓக.15

தூக்குத் தண்டனையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளமுடியாது எனகத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது.

கத்தோலிக்க ஆயர் பேரவையினால் நேற்று செவ்வாய்கிழமை வெளியிடப்பட் பக்கம் 14

## பிரதமர் ரணில் நேற்று கிளிநொச்சி வருகை

### இன்று மடுவுக்கும் செல்வார்

கிளிநொச்சி, ஓக.15

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க் கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்று மாலை 7 மணியளவில் கிளிநொச்சி கரடி போக்குப் பகுதியில் அமைந்துள்ள பக்கம் 14

## மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி இடைநிறுத்தம்



மன்னார், ஓக.15

மன்னார் 'சதொச' வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த மனிதஎலும்புக்கூடுகளின் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. பக்கம் 14

## மஹிந்தவுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு!

கொழும்பு, ஓக.15

சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் குற்ற புலனாய்வுப் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் மஹிந்தவுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற அடிப்படையில், அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி நீதி பக்கம் 14

## வடக்கு - கிழக்கில் மேலும் 400 ஏக்கரை விரைவில் விடுவிக்கிறது இராணுவம்



கொழும்பு, ஓக.15

வடக்கு – கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளில் மேலும் 400 ஏக்கரை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இராணுவம் தெரிவித்துள்ளது. பக்கம் 14

## முல்லைத்தீவு மீனவர் பிரச்சினை; யாழ். வரும் ஜனாதிபதி கரிசனை



கொழும்பு, ஓக.15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது வடக்குக்கான பயணத்தின்போது, முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவுள்ளார் எனத் தெரி பக்கம் 14

# நாட்டின் வருமானம் 10 வீதத்தால் அதிகரித்துள்ளது: பிரதமர் ரணில்

கொழும்பு, ஒக.15

நாட்டின் வருமானத்தை 10 சதவீதத்தால் அதிகரிக்க முடிந்துள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் படுகடனை வரவு செலவுத் திட்டத்தின் 70 சதவீதமாக மட்டுப்படுத்தவது 2020 ஆம் ஆண்டுக்குரிய இலக்காகுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

'மூச்செடுக்க மூன்று வருடங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் குருநாகலில் பூர்த்தி செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பிரதமர் தலைமையில் மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டன.

'மூச்செடுக்க மூன்று வருடங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ்



குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம் சீன மற்றும் இலங்கை அரசின் 15 500 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குருநாகல் மாவட்டத்தில் 27 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 45 000 பேர் பயனடையவுள்ளனர்.

கழிவு நீரை சுத்திகரிப்பதற்காக இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது திட்டமாகும் இது.

இத்திட்டத்தின் மூலம் குருநாகல் நகரை சூழவுள்ள நிலத்தடி நீர் சுத்தமடைவதுடன் கழிவு நீரினால் ஏனைய நீர் வளங்கள் பாதிப்படைவதும் முற்றாகத் தடுக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இலங்கைக்கான சீனத் தூதுவர் சென் சுயேயுவேன் அமைச்சர்களான அகிலவிராஜ் காரியவசம் எஸ்.பி. நாவின்ன பிரதியமைச்சர் அசோக அபேசிங்க, இராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்தன தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்ஸார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பொலிஸ் அதிகாரங்களை நாம் இராணுவத்திற்கு வழங்கப் போவதில்லை !

### பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவிப்பு

சமகால அரசு பொலிஸ் அதிகாரங்களை படையினருக்கு வழங்க மாட்டாது என பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் அதிகாரங்கள் முப்படையினருக்கு வழங்கப்படவுள்ளன என கூறுகிறார்.

இந்தக் கருத்தில் எதுவித உண்மையும் கிடையாது என பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் பொலிஸ் அதிகாரங்களை மாத்திரமன்றி இராணுவ அதிகாரங்களையும் முறைகேடாகப் பயன்படுத்தினார்கள்.

சமகால அரசு பொலிஸாருக்கு உரிய அதிகாரங்களை வழங்கியுள்ளது என பிரதியமைச்சர் நளின் பண்டார மேலும் தெரிவித்தார்.

## உயர்தர பரீட்சையில் கையடக்க தொலைபேசியை வைத்திருந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள்!

தற்பொழுது நடைபெறும் க.பொ.த உயர்தர பரீட்சையில் வினாவுக்கு பதிலளிக்கும்போது கையடக்கதொலைபேசியை வைத்திருந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.


இந்த விசாரணைகள் பரீட்சை நிறைவடைந்த பின்னர் ஆரம்பமாகும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

அதுவரையில் அனைத்து மாணவர்களுக்கும் எந்தவித தடையும் இன்றி சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு பரீட்சை எழுத சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் சம்பந்தப்பட்ட விசாரணையில் இவர் குற்றவாளி என உறுதி செய்யப்பட்டால் இவருக்கு எதிராக தண்டனை வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட மாணவர் கம்பஹாவை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செட்டிகுளம் பிரதேச சபையின் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தால் தொற்று நோய் அபாயம்!



வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையினால் முறையாக கழிவுகள் முகாமைத்துவம் செய்யப்படாமையால் தொற்று நோய் தாக்கம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ள து என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வெண்கலசெட்டிகுளம் பிரதேச சபையால் அகற்றப்படும் கழிவுகள் செட்டிகுளம், பெரியகட்டு பகுதியில் கொட்டப்படுகின்றன. அகற்றப்படும் கழிவுகள் தரம் பிரிக்கப்படாமையும், வகைப்படுத்தப்படாமையும் காரணமாக ஒரே இடத்தில் வீசப்படுகின்றன.

குறிப்பாக அண்மையில் வீசப்பட்ட கழிவுகளில் மருத்துவ கழிவுகள், சிரிஞ், மருந்து கட்டிய துணி வகைகள், பிளாஸ்டிக் பொருள்கள், சேலைன் வெற்றுப் போத்தல்கள், பிரதேசசெயலக ஆவணங்கள் என பல பொருள்கள் ஒரே இடத்தில் வீசப்பட்டுள்ளன.

தற்போது அதிகரித்துள்ள காற்று காரணமாகவும், விலங்குகள் மூலமாகவும் அக் கழிவுப்பொருள்கள் அருகில் உள்ள கிராமங்களுக்கு காவிச் செல்லப்படுகின்றன. இதனால் பெரியகட்டு, கணேசபுரம், கன்னாட்டி ஆகிய கிராமங்களில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க- 100)

## மடு திருத்தல ஆவணி திருவிழா: இன்று ஆயர்களின் கூட்டுத் திருப்பலி



வரலாற்றுச் சிறப்புமிக்க மடு தேவாலயத்தின் வருடாந்த ஆவணித் திருவிழா இன்று ஆயர்களின் கூட்டுத்திருப்பலியாக இடம்பெறவுள்ளது.

வருடந்தோறும் பெருவிழாவாகக் கொண்டாடப்படும் மடுத் திருத்தல ஆவணி பெரு விழாவானது கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்று மாலை விசேட நற்கருணை ஆராதனையும், பவனியும் நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

இன்று காலை 6.30மணிக்கு ஆயர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டைவிட இம்முறை ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் மடு ஆலய திருவிழாவுக்கு வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது .

## உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நீரை பெற்றுக்கொள்ள குளங்களில் கிணறுகளை அமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக.15

தற்பொழுது நிலவும் வறட்சியின் காரணமாக அனுராதபுரத்தில் நீர்வற்றியுள்ள குளங்களில் தற்கால உற்பத்திக்கான கிணறுகளை அமைப்பதற்கான நடவடிக்கை அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது என இடர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

தற்போது நிகழும் வறட்சியின் காரணமாக உற்பத்தி பயிர்கள் அழிந்து போகும் அபாயம் காணப்படுகிறது.

இதனால் இந்த தீர்மானத்தை பயன்படுத்தி இந்த பிரதேசங்களுக்கு நீரை விநியோகிப்பதே பிரதான நோக்கமாகும்.

அனுராதபுரம் ஹோரோபோதான பறங்கியவாடிய என்ற கிராமத்தில் 11 குளங்களை புனரமைப்பு தொடர்பாக விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் விவசாய மக்களுக்கும் தெளிவு படுத்திய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# தொழில் முயற்சியாளர்களின் ஆர்வம் காரணமாக இந்தியா - இலங்கை உறவில் பெரும் முன்னேற்றம்

### வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்த கூட்டத்தில் தூதுவர் தரண்ஜித் சிங்

இந்திய - இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் 10 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் இந்தியதூதுவர் தரண்ஜித் சிங் சந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கொழும்பு தாஜ் சமுத்திராவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்டு இந்தியத் தூதுவர் இரு நாடுகளிற்கும் சுபீட்சத்தைக் கொண்டு வருவதில் தொழில் முயற்சியாளர்களின் ஆர்வம் மற்றும் கடும் பிரயத்தனம் என்பவற்றை பாராட்டினார். கடந்த ஒரு வருடத்தில் இந்தியா மற்றும் இலங்கை என்பவற்று றுக்கிடையிலான உறவில் முக்கியமான மைல் கற்களை அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் இந்தியத் தூதுவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இருதரப்பு அபிவிருத்திப் பங்குடமை தொடர்பிலும், இலங்கைக்



கான அவரது கடைசி விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் மேற்கொள்ளப்பட்ட கொழும்பு மற்றும் வாரணாசி என்பவற்றுக்கிடையிலான நேரடி விமான சேவையை ஆரம்பித்தல். நாடு முழுவதிலுமான அவசரநிலை அம்புலன்ஸ் சேவையின் அங்குரார்ப்பணம் மற்றும் மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 14000 வீடுகளின் முதற் தொகுதியைக் கையளித்தல் போன்ற வாக்குறுதிகளை இந்தியா ஒரு கால அடிப்படையில் நிறைவேற்றியுள்ளது .

இலங்கையில் இந்தியாவின் அபிவிருத்தி முயற்சிகள் மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்களது வாழ்வில் ஓர் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துகின்றமையை இலக்காகக் கொண்டவை.

இரண்டு அரசாங்கங்கள் மட்டும் தனியே அபிவிருத்தி எனும் மாயாஜாலத்தை உருவாக்க முடியாதெனவும் அபிவிருத்திப் பாதையை உருவாக்குவதில் இரண்டு நாடுகளினதும் தொழில்துறை ஒரு முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ளன எனவும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வருடம் நவம்பரில் ஹைதராபாத்தில் நடைபெற்ற உலக தொழில் முயற்சியாளர்கள் மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடியின் உரையிலிருந்து அவர் கூறியதை தூதுவர் மேற்கோள் காட்டினார். அதில் தொழில் முயற்சியாளர்களின் தன்மைகளைக் குறிப்பிட்டார்.

'மனித இனத்தின் நன்னிலைக்காக காலத்திற்கு முந்தியதாகவே வேறுவகையில் சிந்திப்பதற்கான சக்தி தொழில் முயற்சியாளரை மற்றவர்களிலிருந்து வேறுபடுத்துகிறது'. தொழில் அதிபர்கள் முன்னோக்கி தொலைதூரம் பார்த்தல் வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

இந்திய – இலங்கை சம்மேளனத்தின் தலைவர் விஷ் கோவிந்தசாமி உரையாற்றுகையில்–

இரண்டு நாடுகளினதும் தொழில்துறைகளுக்கிடையில் ஆர்வத்துடனான ஈடுபாடு, இரண்டு நாடுகளினதும் வர்த்தக சம்மேளனங்களுக்கிடையிலும் அதிகரித்த இடைத்தொடர்புகள் மற்றும் வர்த்தகத் தூதுக்குழுக்களின் விஜயங்கள் என்பவற்றினால் குறிக்கப்படுகிறது என்று கூறினார். இரண்டு நாடுகளுக்குமிடையில் வியாபாரம் வளர்வதற்கு உதவுவதில் இந்திய - இலங்கை சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பில் அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் இந்திரா மல்வத்த மற்றும் பல கைத்தொழில் அதிபர்கள் கலந்துகொண்டனர்.

# பாதாளக் குழுக்கள் கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, ஓக.15

வெகு விரைவில் பாதாள குழுக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், தென் மாகாணங்களில் பாதாள குழுவினரது சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வெளிநாடுகளில் தலைமைமறைவாகியுள்ள பாதாள குழு தலைவர்களை நாட்டுக்கு கொண்டுவருதற்கு இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே, வெகு விரைவில் பாதாள குழுக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்.

அத்துடன், தென்னிலங்கையில் செயற்படுகின்ற பாதாள குழுக்களைப் போன்று வடக்கில் இயங்குகின்ற ஆவா குழுவினர் பயங்கரமானவர்கள் அல்லர். ஆவா குழுவினர் பெரும்பாலும் 20 வயதிற்குட்பட்டவர்கள். இவர்களுக்குள் இடம்பெறும் முரண்பாடுகள் பெரிதுபடுத்தப்படுகின்றன.

தென்னிந்தியத் திரைப்படங்களில் இடம்பெறும் வன்முறை சம்பவங்களைப் பின்பற்றியே இவர்கள் செயற்படுகின்றனர். இக்குழுவினரை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குரிய விசேட திட்டங்கள் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நாட்டில் இடம்பெறும் போதைபொருள் குற்றச் செயல்களை முற்றாக ஒழிப்பதற்கு மரண தண்டனையினை நடைமுறைப் படுத்தியாக வேண்டும். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்தில் இருந்து அரசாங்கம் ஒரு போதும் பின்வாங்காது எனத் தெரிவித்துள்ளார்.

# நாயாறு படகு எரிப்பு எமது கைகளை கட்டி வைத்து தாக்கும் செயற்பாடே

## அனந்தி சசிதரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக.15

நாயாறுப் பகுதியில் தமிழ் மீனவர்களின் வாடிகள், படகுகள், தொழில் உபகரணங்கள் எரியூட்டப்பட்ட செயலுக்குத் தனது வன்மையான கண்டத்தை தெரிவித்த வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், இந்தச் செயற்பாடானதுஎமதுகைகளைக் கட்டி வைத்துவிட்டு அடிக்கும் செயற்பாடு எனவும் கூறினார்.

நேற்று மாலை யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரது அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாயாறுப் பகுதியில் தமிழ் மீனவர்களது வாடிகள் இனந்தெரியாதோரால் எரியூட்டப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடானது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இதேபோன்றே வடமராட்சி கிழக்கிலும் சட்டவிரோதக் கடலட்டைத்தொழில்நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராடியபோது அங்கும் எமது மீனவர்களது படகுகள் இரண்டு முறை எரிக்கப்பட்டிருந்தன.

முல்லைதீவில் மக்கள் இவ்வாறு போராடியபோது அதற்கு மத்திய மீன்பிடித்துறை அமைச்சர் வாக்குறுதி வழங்கிய பின்னரும் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பது மத்திய அரசின் ஆதரவுடனான இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றனவா என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது எங்களது கைகளைக் கட்டி வைத்துவிட்டு எம்மைத் தாக்குவது போலவே உள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதே தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பி வரும் நிலையில், இவ்வாறான மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் அந்த மக்களது வாழ்வாதாரத்தை மீளவும் நிர்மூலமாக்குவன வாகவே அமையும்.

எனவே இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றமிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசால் நட்ட ஈடு வழங்கப்பட்டு இம் மீனவர்கள் தமது கடலில் சுதந்திரமான மீன்பிடியில் ஈடுபட வழியமைக்கவேண்டும் –என்றார்.

# பூட்டான் சென்று திரும்பிய வீராங்கனைகளுக்கு யாழ். நகரில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது

இலங்கைத் தேசிய கால்பந்தாட்ட அணிக்கு தெரிவுசெய்யப்பட்டு பூட்டானில் இடம்பெற்ற சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றித் தாயகம் திரும்பிய பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை வீராங்கனைகளுக்கு யாழ்.நகரில் நேற்று மகத்தான வரவேற்பளிக்கப் பட்டது.

தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பூட்டான் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் கால்பந்தாட்டப் போட்டிக்கு இலங்கை தேசிய மகளிர் அணி தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 23 பேர்கொண்ட தேசிய அணியில் வடக்கு மாகாணத்தில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு தமிழ் வீராங்கனைகள் இடம்பெற்றனர்.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளான பா.செயந்தினி, ஏ.டி.மேரி கொன்சிகா, ர.கிருசாந்தினி மற்றும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவிகளான எஸ்.தவப்பிரியா, யு.ஜோகிதா, ஜெ.ஜெதுன்சிகா ஆகியோர் மேற்படி அணியில் இடம்பெற்றனர்.

கடந்த வாரம் பூட்டான் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற போட்டிகளில் இந்திய மற்றும் பூட்டான் அணிகளுடன் இவர்கள் விளையாடினர்.

போட்டிகள் முடிவடைந்து தாயகம் திரும்பிய பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை வீராங்கனைகளில் ஒருவர் கொழும்பில் தங்கிநின்ற நிலையில் சாந்தை பண்டத்தரிப்பைச் சேர்ந்த பா.செயந்தினி, மாதகலைச் சேர்ந்த ஏ.டி.மேரி கொன்சிகா ஆகியோர் நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தனர். இவர்களுக்குசாந்தையில்உள்ள







சமூகமட்ட அமைப்புக்களின் ஏற்பாட்டில்யாழ்.நகரில்மகத்தான வரவேற்பளிக்கப் பட்டது.

டென்மார்க் டெமக்கிரட்டிவ் கட்சியின் உறுப்பினரும் டென்மார்க் உயர்நீதிமன்ற ஜீரருமான தருமன் தருமகுலசிங்கம் வீராங்கனைகளுக்கு மாலை அணிவித்தார். தொடர்ந்துசாந்தை விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் அ.பாலச்சந்திரன், விநாயகர் விளையாட்டுக் கழகத் தலைவர் ந.ரசிகரன், வெண்கரம் செயற்பாட்டாளர்களான மு.கோம கன், ந.பொன்ராசா ஆகியோ ரும் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை வரை அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் பாண்ட் இசையுடன் அவர்களின் சொந்த ஊர்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பிரதேச மக்கள் மலர் மாலை அணிவித்து அவர்களை வரவேற்றனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உச்ச ஸ்தா யியை எட்டும் ஐக்கியம் பற்றிய கோஷம் பின்னர் மெல்ல பல மிழந்து பலவீனமாகிவிடும்.

இப்போதும் தமிழர்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானது எனக் கருதப்படும் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நெருங்கி வருகின்றமையால் ஒற்றுமை பற்றிய வலியுறுத்தல்களும் தீவிரம் பெறத் தொடங்கியுள்ளன.

ஆனால் இம்முறை ஒரு வித்தியாசம். இந்த ஒற்றுமை வலியுறுத் தல், உள்நாட்டில் தேர்தல்களை இலக்கு வைக்கும் சக்திகள் மட்டத்திலிருந்து மட்டுமல்லாமல் விசேட மாக புலம்பெயர்ந்த தரப்பிலிருந்தும் வரத் தொடங்கியிருக்கின்றது.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஓர் அமைப்பு, இலங்கையில் தமிழர் தேசியத்துக்காகப் போராடும் கட்சிகள், அமைப்புகளை ஒன்றுபடுத்தும் முயற்சியின் ஓர் அங்கமாக பல்வேறு தலைவர்களையும் ஒரே சமயத்தில் லண்டனுக்கு அழைப்பித்து ஒரு மேசையில் அமர்த்திப் பேசவைத்தும், தீர்வுக்கான இலக்கில் சகல தமிழர் தரப்புகளும் ஒரே நிலைப்பாட்டில் – ஏகக்கொள்கைப் போக்கில் – நிற்கின்றமையை உறுதிப்படுத்த எத்தனிக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் சம்பந்தர், மாவை, சுமந்திரன் என்று தொடங்கி ரெலோ, புளொட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்றவற்றின் தலைவர்கள், முதலமைச்சர் விக்னேஸ்வரன் என அனைத்துத் தரப்பினரையும் ஒரு மேசையில் வைத்து உடன்பாடு காணவைப்பது சம்பந்தப்பட்ட தரப்புகளின் இலக்கு எனத் தெரிகின்றது.

வடக்கு மாகாண சபையின் தற்போதைய பதவிக்காலம் ஒக்ரோபர் 23ஆம் திகதியுடன் காலாவதியானகையோடு இந்தக் கூட்டத்தை லண்டனில் நடத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவாம்.

இந்தக் கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட தலைவர்களை அழைத்து வருகின்றமை தொடர்பான நடவடிக்கைகளைக் கையாளும் பொறுப்பு தனித்தனிப் பிரமுகர்கள் மற்றும் நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வந்தது.

டக்ளஸ் தேவானந்தா, ஆனந்த சங்கரி போன்றோரையும் இந்த ஒன்று கூடலுக்கு அழைக்கும் எண்ணம் உள்ளதா என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

தமிழர் தலைவர்கள் எல்லோரும் 'தனிஈழம்' என்று தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, சமஷ்டித் தீர்வுக்கு இணங்கி வந்திருந்தாலும் கூட –

'இரண்டு தேசங்கள்; ஒரு நாடு' – என்ற கொள்கைப் போக்கிலும் நிலைப்பாட்டிலும் விடாப்பிடியாக நிற்கும் கஜேந்திரகுமாரையும், 'எக்கிய ராஜ்ஜிய' என்ற தீர்வுக்கு இணங்கிநிற்கும் சுமந்திரனையும் ஒரு நேர்கோட்டுக் கொள்கைப் போக்கில் கொண்டுவருவது சாத்தியம் என்ற இலக்கோடு செயற்படும் புலம்பெயர் சக்திகளின் நம்பிக்கை பாராட்டத்தக்கது.

இந்த முயற்சியில் ஈடுபடும் புலம்பெயர் சக்திகளிடம் நமது கோரிக்கையும் ஒன்று உள்ளது.

இங்கு தாயகத்தில் – களத்தில் – பிளவுபட்டு, பிரிந்து நிற்கும் தமிழர் தரப்புகள் ஒன்றுபட்டால் தான் – ஐக்கியப்பட்டு நின்றால் தான் – தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிட்டுவது சாத்தியம் என்ற கருத்து எவ்வளவு தூரம் வலிமையானதோ, அதையளவுக்கு களத்தில் நிற்கும் தமிழர்களுக்கு பின்புலமாகவும், பின்பலமாகவும் அமைவதோடு, அவர்களுக்கான சர்வதேச ஆதரவுத் தளத்தையும் திரட்டித்தரும் வலிமை கொண்ட நமது புலம்பெயர் சமூகமும் தமக்குள் பிளவுபட்டு, பிரிந்து நிற்காமல் ஐக்கியமாக நிற்பது அவசியம் என்ற கருத்தும் மிக வலிமையானதாகும்.

களத்தில் உள்ள நமது தலைவர்களை புலத்தில் உள்ளோர் ஐக்கியப்படுத்த முயற்சிக்கின்றனர். புலத்தில் பிளவுபட்டு நிற்கும் நமது தலைமைகளை யார் ஐக்கியப் படுத்தப் போகின்றார்கள்?

அவர்கள் தாமாகத் தமக்குள் அந்த முயற்சியை எடுத்தால்தான் அது சாத்தியமாகும்.

களத் தலைவர்களை ஒன்றிணைக்க முயலும் புலத் தலைவர்கள் அவ்விடயத்தில் தாங்களும் முன்மாதிரியாக நடந்துகொண்டால் நல்லது.

- மின்னல் -

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனநாயக மாண்பை மீறலாமா?

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் சபாநாயகர் கரு ஜெயசூரிய வழங்கிய முடிவை – தீர்ப்பை – ஏற்றுக்கொள்ளவே முடியாது எனச் சீற்றத்துடன் கூறியுள்ள கூட்டு எதிரணியினர், இது விடயத்தில் தாங்கள் காட்டத்துடன் செயற்படப் போகிறார்கள் என்றும் எச்சரித்திருக்கின்றனர்.

கூட்டு எதிரணியினரின் உரிமைகளை சபாநாயகர் புறக்கணிப்பாரானால் – புறந்தள்ளி நடப்பாராயின் – தாமும் நாடாளுமன்றில் சபாநாயகரைப் புறந்தள்ளி செயற்படுவோம் என கூட்டு எதிரணி சார்பில் அதன் உறுப்பினரான உதய கம்மன்பில எம்.பி. கூறியிருக்கின்றார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய, சுயாதீனமாக, சுதந்திரமாகச் செயற்படவில்லை என்றும் பிரதமரின் தலையசைவுக்கு ஏற்ப பக்கம் சார்ந்து – சாய்ந்து செயற்படுகின்றார் என்றும் அவர் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகரைப் புறந்தள்ளி கூட்டு எதிரணியினர் எவ்வாறு செயற்படப் போகின்றனர், அவர்களின் நடவடிக்கைப் போக்கு எவ்வாறு அமையப் போகின்றது என்ற விவரங்களை அவர் வெளியிடவில்லை.

ஜனநாயகத்தின் முக்கிய மூன்று தூண்களில் ஒன்று நாடாளுமன்றம், மற்றைய இரண்டும் – நீதித்துறையும், நிறைவேற்று அதிகாரமுமாகும்.

ஒரு நாட்டில் ஜனநாயகம் செழிக்க வேண்டுமானால், இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதாமலும் தனித்துவமாகவும் சுயாதீனமாகவும், அவற்றுக்குரிய மாண்பைப் பேணிப் பாதுகாக்கும் விதத்திலும் செயற்படுவது மிகமிக அவசியமாகும். அதிலும் சட்டமாக்கும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம் முழு அளவில் ஜனநாயக மாண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவது மிக முக்கியமானதாகும்.

நாடாளுமன்றம் கண்ணியமாகவும் ஜனநாயகப் பண்பியல்புகளுக்கு அமையவும் செயற்படுகின்றமைக்கு மைய அச்சு சபாநாயகரே.

அவர் ஒரு கட்சியிலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவராக இருந்தாலும், சபாநாயகராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவேளை முதல், நாடாளுமன்ற மாண்புகள், பாரம்பரியங்கள், பொதுவான செயற்பாடுகள், நடவழக்கைகள் போன்றவற்றில் அணிகள், கட்சிகள், கன்னைகள் சாராத நடுநிலையாளராக – செங்கோல் வழுவா நீதியாளராக – செயற்பட வேண்டியமை கட்டாயமாகும்.

நாடாளுமன்ற நடவழக்கைகளை எப்படி முன்னெடுப்பது என்பதற்கு நாடாளுமன்ற ஒழுங்கு விதிகள், நிலையியல் ஏற்பாடுகள், இவை தவிர, ஏற்கனவே இலங்கை நாடாளுமன்றத்தில் முன்மாதிரியாக முன்னெடுக்கப்பட்ட வழக்காறுகள், பாரம்பரியங்கள் போன்றன உண்டு. அவற்றின் வழியேதான் நாடாளுமன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதனை உறுதிப்படுத்துபவரும், அவற்றின் வழியே நீதி வழங்கி அதனை நிலை நிறுத்துபவரும் சபாநாயகர்தான். அதனால்தான் ஒரு நீதியரசருக்கு ஒப்பான பொறுப்பில் அவர் உள்ளார் என்று கருதப்படுகின்றது. அதனால்தான் நாடாளுமன்ற அமர்வுகளில் மிக உயர்ந்த மகத்துவமும், மரியாதையும், மேன்மையான இடமும் அவருக்கு வழங்கப்படுகின்றன.

இராஜதந்திர மரியாதை – மகத்துவ – பட்டியலில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அடுத்து மூன்றாவது இடம் சபாநாயகருக்கு உரியது.

தனித்துவமாகவும், சுயாதீனமாகவும் செயற்பட வேண்டிய சபாநாயகரின் நாடாளுமன்ற நடவழக்கைப் போக்கில் நீதித்துறை கூட – அதன் மேன்மை மிக்க உச்சப்பீடமான உயர் நீதிமன்றம் கூட – தலையிட முடியாது என்பதுதான் பொதுவான நிலைப்பாடு. அதனை உறுதிப்படுத்துவது போன்று அனுரா பண்டாரநாயக்கா சபாநாயகராக இருந்தபோது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உத்தரவை வெளியிட்டு, சபாநாயகர்களின் செயற்பாட்டுக்கு ஒரு முன்மாதிரிப் பதிவை மேற்கொண்டு சென்றிருக்கின்றார்.

இந்தப் பின்புலத்தில் தான், கூட்டு எதிரணி சபாநாயகரை மீறிச் செயற்படப் போவதாக எச்சரிக்கை விடுத்திருக்கின்றது. அப்படிச் செயற்படுவது நீதிமன்றத்தில் நடுநிலையாளராக வீற்றிருக்கும் நீதிபதியையே மீறிச் செயற்படப் போகின்றோம் எனக் கட்சிக்காரர்கள் அறிவிக்கின்றமைக்கு ஒப்பாகும். பெரும் களேபரத்துக்கும் குழப்பத்துக்கும் தான் அது வழிவகுக்கும்.

*'பிரதான இரு கட்சிகளும் நல்லாட்சி என்ற பெயரில் தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கு எழுத்து மூலம் இணக்கம் கண்டு – உடன்பாடு செய்து – அரசை அமைத்துள்ளன. கூட்டு எதிரணியினர் என்று தம்மை அழைக்கும் குழுவைச் சேர்ந்தோர் இந்தப் பிரதான இரண்டு கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தித்தான் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் அவற்றிலேயே அங்கம் வகிக்கின்றனர். அதனால் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க முடியாது. அது நாடாளுமன்றப் பாரம்பரியங்களுக்கு முரணானது'* – என்பதே சபாநாயகரின் தீர்ப்பு.

ஆனால், *'ஐ.தே.கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே தேசிய அரசுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. ஆனால், நாம் நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையே பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். சு.க. சார்பில் செய்யப்பட்ட ஒப்பந்தம் எங்களைக் கட்டுப்படுத்தாது'* – என்பது கூட்டு எதிரணியின் வாதம்.

கூட்டு எதிரணியின் இந்தக் கருத்து நிலைப்பாட்டில் சில நியாயங்கள் இருக்கின்றன எனத் தோன்றினாலும், அதற்காக இவ்விடயத்தை நீதிமன்றுக்கு எடுத்துச் செல்வதற்கோ, வேறு வழிகளில் தீர்வு காண்பதற்கோ வாய்ப்பும் இல்லை; இடமும் இல்லை; வழியும் இல்லை.

'அழுதும் தான்தான் பிள்ளை பெற வேண்டும்' என்பது போல னிகூட்டு எதிரணி இந்தப் பிரச்சி னைக்கு நாடாளுமன்றத்தில் – சபாநாயகரிடம் இருந்துதான் – தீர்வைப் பெற முடியும்.

அதற்காக நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், பண்பியல்புகளை மீறுவதோ, நாடாளுமன்றத்தில் மதிப்புக்குரிய சபாநாயகர் பதவியின் கண்ணியத் தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் இழுக்கு ஏற்படுத்தி நடந்து கொள்வதோ பொருத்தமற்றது. அது ஜனநாயக மாண்பைக் கொல்வதற்கு ஒப்பானது.

# பெண்கள் பிரச்சினைகளில் விசேட கவனம் வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் செல்வராணி

கிளிநொச்சி, ஓக.15

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் என கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் தர்மலிங்கம் செல்வராணி பிரேரணை ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்.

நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபையின் ஆறாவது அமர்வின்போதே அவர் இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. சட்ட விரோத மதுபான உற்பத்தி, தொழில்வாய்ப்பின்மை, போன்றவற்றாலும், ஏனைய காரணிகளாலும் அவர்கள் எதிரகொள்ளும் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு விசேட அலகொன்றை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்த அவர், கிளிநொச்சியில் பெண்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு பொதுச் சந்தையில் இடம் ஒன்றினையும் ஒதுக்கீடு செய்து தருவதோடு, புதிதாக அமைக்கப்பட்டு வரும் கிளிநொச்சி மத் திய பஸ் நிலையத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கு பிரத்தியோகமாக அறை ஒன்று அமைக்கப் படவேண்டும் என்றும் கோரினார்.

இதனை கரைச்சி பிரதேச சபை ஏற்றுக்கொண்டதோடு, ஏற்கனவே காணப்படுகின்ற நான்கு குழுக்களுக்கு மேலதிகமாக ஐந்தாவது குழு ஒன்றையும் உருவாக்கி பெண்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# ஓட்டோவில் கஞ்சாவுடன் சென்றவர் தப்பி ஓட்டம்

## சாரதி கைதானார்

வவுனியா, ஓக.15

வவுனியா நொச்சிமோட்டைப் பாலத்தில் கடந்த ஞாயிறு இரவு பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின்போது ஓட்டோ ஒன்றில் போதைப் பொருளைக் கொண்டு சென்ற நபர் ஒருவர் அதனைக் கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளார். இதையடுத்து ஓட்டோச் சாரதியைக் கைது செய்த பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30மணியளவில் கள்ளிக்குளத்திலிருந்து நபர் ஒருவருடன் வவுனியாவுக்கு வாடகைக்கு ஓட்டோ ஒன்று சென்றபோது நொச்சிமோட்டை பாலத்தில் பொலிஸாரின் வழமையான சோதனை நடவடிக்கை இடம் பெற்றது. ஓட்டோவை பொலிஸார் சோதனைக்குட்படுத்தியபோது, அதில் பயணித்த நபர் ஒருவர் இறங்கி வெளியே காத்திருந்துள்ளார். ஓட்டோவில் பொலிஸார் சோதனை மேற்கொண்டபோது கஞ்சாப் பொதிகள் சிலவற்றை மீட்டனர்.

இதன்போது ஓட்டோவில் சென்று இறங்கி வெளியே காத்திருந்த நபர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். பொலிஸார் அந்த நபரைத் துரத்திச் சென்றபோதும் அவர் தப்பி ஓடிவிட்டார். இதையடுத்து ஓட்டோச் சாரதியைக் கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் நேற்று பிற்பகல் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவரை 10ஆயிரம் பெறு மதியான இரு சரீரப்பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

(ஐ -100)

# சிறைக்காவலர்கள் நியமனத்தில் சிக்கல்

சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கும் நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்குமிடையில் தோன்றியுள்ள முறுகல் நிலை காரணமாக, 1184 சிறைக் காவலர்களுக்கான வெற்றிடங்களுக்கு நியமனங்கள் வழங்குவதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதவிக்காக இணைத்துக்கொள்ளும் புள்ளி மட்டத்தை அதிகரிப்பதற்கு அமைச்சு கொண்டு வந்துள்ள தீர்மானத்தால், குறித்த பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்ட 900 பேருக்கு அதிகமானோர் பதவி இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதமே புதிய சிறைக் காவலர்களுக்கான நியமனங்கள் வழங்கத் தீர்மானித்திருந்தபோதிலும், ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய, உயர் புள்ளிகள் பெறாதவர்களுக்கு 27–32க்கிடையில் புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்து, இந்த பதவிக்கு தகுந்தவர்களை நியமித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எனினும், 40 புள்ளிகளுக்கு அதிக புள்ளிகளைப் பெற்றவர்களை இணைத்துக்கொள்ள நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அரச பணிகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டை முன்னேற்ற சிறிய – நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் அவசியம்

## இராஜாங்க அமைச்சர் இரான் வலியுறுத்தல்

எமது நாட்டினை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வதற்கு, அதிகளவில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் உருவாக வேண்டுமென இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன குறிப்பிட்டார்.

'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ், மேலும் ஒரு லட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க முனைவதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும் இலங்கையின் சனத்தொகையில் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை 3 சதவீதத்தையேனும் எட்டவில்லை என சுட்டிக்காட்டிய அவர், வியட்நாம், தாய்லாந்து முதலான நாடுகளில் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கைகள் இதை விட அதிகமெனவும் கூறினார்.

390 வியாபாரங்களுக்கான கடன் திட்டங்கள் ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்டு வங்கிகள் ஊடாக கடன் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், 783 வியாபாரங்களுக்கான கடன் திட்டங்களை ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# மீன்பிடித்தொழிலை நம்பியே எமது வாழ்வாதாரம் உள்ளது

## நாயாறு மீனவக் குடும்பங்கள் தெரிவிப்பு

எமது பிள்ளைகளின் கல்வி, வாழ்வாதாரம் அனைத்தும் இந்த மீன்பிடித் தொழிலை நம்பியே உள்ளது என முல்லைத்தீவு நாயாறு பகுதியிலுள்ள உள்ளூர் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாயாறு பகுதியின் உள்ளூர் மீனவர்களுக்குச் சொந்தமான 8 வாடிகள் உட்பட மீன்பிடி உபகரணங்கள் யாவும் நேற்று முன்தினம் இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பாக அந்த மீனவக் குடும்பத்தினர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்–

வாழ்வாதாரத்திற்கான எமது சொத்தாக இருந்த மீனவ உபகரணங்கள் அனைத்தும் இன்று அழிந்துபோயுள்ளன.

எட்டு வாடிகள் தீக்கிரையாக்கப்பட்ட நிலையில் அங்கிருந்த சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களெரிந்துநாசமாகியுள்ளன.

நாம் குடிவந்த காலப்பகுதியிலிருந்து பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம். எமது பிள்ளைகளின் கல்வி, வாழ்வாதாரம் அனைத்தும் இந்த மீன்பிடித் தொழிலை நம்பியே உள்ளது. எனவே, எமக்கு நல்லதொரு தீர்வு கிட்ட வேண்டும் என நாம் கோருகின்றோம் – என்றனர்.

## நாளை

16.08.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : சித்திரை மு.ப 9.42 வரை
திதி : பஞ்சமி மு.ப. 7.15 வரை
சுபநேரம் : 7.35 – 9. 05 வரை
இராகுகாலம் : 1.35 – 3.05 வரை

# இலங்கை உட்பட சில வெளிநாடுகளின் நாணயத் தாள்கள் சீனாவில் அச்சடிப்பு

## தங்கள் நாடு அதில் இல்லை என்கிறது இந்தியா

கொழும்பு, ஒக. 15

இலங்கை உள்ளிட்ட பல நாடுகளின் நாணயத் தாள்களை சீனாவே அச்சிடுகிறது என சவுத் சைனா மோர்னிங் போஸ்ட் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களில் செல்வாக்கைக் கட்டியெழுப்பும் வகையில், பெரியளவில் வெளிநாட்டு நாணயத்தாள்களை சீனா அச்சிடுகிறது.

சீனாவில் உள்ள நாணயத் தாள் அச்சிடும் தொழிற்சாலைகள் முழு அளவில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அண்மைக்காலம் வரை சீனா வெளிநாட்டு நாணயத்தாள்களை அச்சிட வில்லை என்று சீனாவின் வங்கி நாணயத் தாள்கள் அச்சிடும் நிறுவனத்தின் தலைவரான லியூ கியூஷெங், தெரிவித்துள்ளார்.

அணை மற்றும் பாதை திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், நேபாள நாணயத் தாள்களை அச்சிட ஆரம்பித்தது என்று சைனா பினான்ஸ் இதழில் லியூ எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பின்னர், தாய்லாந்து, பங்களாதேஷ், இலங்கை , மலேசியா, இந்தியா, பிரேஸில், போலந்து உள்ளிட்ட நாடுகளின் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு நேபாளம், 1000 ரூபா மதிப்புள்ள 200 மில்லியன் நாணயத் தாள்களை அச்சிடும் பணியை சீன நிறுவனத்திடம் வழங்கியது. கடந்த ஆண்டு முதல் தொகுதி நாணயத் தாள்கள் நேபாளத்துக்கு வழங்கப்பட்டன.

சீனாவில் நாணயத் தாள்களை அச்சிடும் செலவு குறைவானது என்று நேபாள ராஷ்ட்ரா வங்கியின் பணிப்பாளர் புகுபன் கடெல் தெரிவித்தார்.

இன்னொரு நாட்டில் முன்னர் அச்சிடப்பட்டதை விட தரம் நன்றாக இருக்கிறது. இதற்காக முன்னர் கொடுத்த தொகையை விட பாதியே செலவாகியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இந்தியாவின் நாணயத் தாள்கள் சீனாவில் அச்சிடப்படுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையில், இந்திய மத்திய நிதி அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்திய நாணயத் தாள்கள் சீனாவில் அச்சிடப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்திய நாணயத் தாள்களை அச்சிடும் வேலை சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை என்று இந்திய நிதியமைச்சின் பொருளாதார விவகார திணைக்களத்தின் செயலரை சுபாஸ் சந்திர கார்க் தெரிவித்துள்ளார்.

இந்திய நாணயத் தாள்கள் இந்திய அரசாங்கத்தினால், றிசேவ் வங்கியின் அச்சகங்களிலேயே அச்சிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# நல்லூரில் நாளை இசையரங்கு ஆரம்பமாகிறது

நல்லூர், ஒக.15

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் ஆலய உற்சவ காலத்தையொட்டி, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு நாளை 16 ஆம் திகதி முதல் தொடர்ந்து மாலை வேளையில் நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரையான – 27 நாள்கள் – நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 முதல் 8.15 மணி வரை இசையரங்கு இடம்பெறும்.

நாளை வியாழன் கொடியேற்ற நாளன்று முதல் நாள் நிகழ்வில் 'செஞ்சொற் செல்வர்' ஆறு.திருமுருகன் ஆசியுரை வழங்குவார். (இ)

# வறட்சி காரணமாக வற்றிப்போன குளங்களால் வாழ்வாதாரம் பறிபோகும் அபாயத்தில் மீனவர்



திருகோணமலை மாவட்டத்தில் வறட்சி காரணமாக அதிகளவில் குளங்கள் வற்றிப்போயுள்ள நிலையில் மீன்பிடி தொழிலை நம்பி வாழ்ந்து வரும் மீனவர்கள் மிகவும் பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அபாய நிலை உள்ளது என்றும் கவலை வெளியிட்டுள்ளனர்.

குளங்களில் நீர் வற்றிப்போய் காணப்படுவதனால் மீனவர்களின் குடும்பங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு கூட கஷ்டப்படுகின்றனர் என்றும் மாவட்டத்தில் அதிகளவான பகுதிகளில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குளங்களைநம்பிவாழ்ந்துவரும் மீனவக் குடும்பங்களுக்கு வறட்சியான காலப்பகுதியில் நிவாரணம் வழங்குவதற்குரிய ஒழுங்குகளை பிரதேச செயலகங்களும், மாவட்ட அரச அதிபர் அலுவலகமும் முன்னெடுக்க வேண்டுமெனவும் மீனவக் குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றன.

அத்துடன் அரசால் அரச அதிகாரிகளுக்கு பல காப்புறுதி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் குளங்களை நம்பி வாழும் மீனவக் குடும்பங்களுக்கு எதுவித காப்புறுதி திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை யெனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே அரச அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளைப் போன்று மீனவர்களுக்கும் திட்டங்களை முன்னெடுப்பதுடன் நிவாரணங்களையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஹாங்கேரிய நிறுவனம் – இ.போ.ச. கூட்டாக போக்குவரத்துச் சேவை



வரும் 1,000 பஸ்களை அந்த நிறுவனமே பராமரிக்கும்

கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள நகர பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஏனைய பஸ்கள்

போக்குவரத்து மற்றும் சிவில் விமானதுறை அமைச்சினால் ஹங்கேரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள குளிரூட்டப்பட்ட 1000 பஸ்களை இலங்கை போக்குவரத்துசபையும்பஸ்களை வழங்கும் ஹங்கேரிய நாட்டு நிறுவனத்துடன் அமைக்கப்படவுள்ளகூட்டு நிறுவனத்தின் மூலம் பயணிகளுக்கான போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தில் இயங்க கூடிய 200 பஸ்களும் 750 ஹைபிரிட் பஸ்களும் இதில் இடம்பெறுள்ளன.

மின்சாரத்தில் இயங்க கூடிய 250 பஸ்கள் கொழும்பு மற்றும் தூர பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் ஸ்ரீவர்தன தெரிவித்தார்.

புதிதாக கொண்டுவரப்படும் பஸ்கள் ஹங்கேரிய நிறுவனத்தினால் பராமரிக்கப்படும்.

அதேபோல இந்த சேவையின் மூலம் பெறப்படும் வருமானத்தில் ஒரு பகுதி இலங்கை போக்குவரத்து சபைக்கு கிடைக்கும் வகையில் உடன்படிக்கைசெய்துகொள்ளப்படும் எனவும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்தார்.

# ரயில்வே தொழிற்சங்க ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பால் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை மங்களவிடமே பெறவேண்டும்

## வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

ரயில்வே தொழிற்சங்க ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பால் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை அமைச்சர் மங்கள சமரவீரவிடமிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும்.

தொழிற்சங்கங்களுக்கு உறுதியளித்த தீர்மானத்தை அவர் மாற்றியமைத்ததாலேயே இந்த நிலை ஏற்பட்டது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோலிச மக்கள் முன்னனி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரயில்வே ஊழியர்கள் கடந்த 5 தினங்களாக மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தால் பொதுமக்கள் கடும் அசௌகரியங்களுக்கு ஆளாகியிருந்தனர். அதேபோன்று உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நஷ்ட ஈடு வழங்குவது யார்? அத்துடன் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக அரசாங்கத்துக்கு 7 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த தொழிற்சங்கங்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தி அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் சம்பள



முரண்பாட்டைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த பின்னர் அவர்கள் பணிப் பகிஷ்கரிப்பை கைவிடத் தீர்மானித்தனர்.

ஆனால் இந்த நடவடிக்கையை அமைச்சர் மங்கள சமரவீர ஆரம்பத்திலே மேற்கொண்டிருந்தால் இந்தளவு பாதிப்பு ஏற்பட்டிருக்காது.

அத்துடன் தொழிற்சங்கங்கள் பணி பகிஷ்கரிப்பை கைவிட்டு வந்தால் மாத்திரமே பேச்சுக்கு தயார் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அதனால் ரயில்வே திணைக்களத்துக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை அமைச்சர் மங்கள சமரவீரவிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரயில்வே தொழிற்சங்க ஊழியர்களுக்கு வழங்குவதாக தெரிவித்திருந்த தீர்மானத்தை மங்கள சமரவீர மாற்றியமைத்துள்ளார். அதனால்தான் அவர்கள் திடீர் பணிப் பகிஷ்கரிப்புக்குச் சென்றார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கொழும்பில் இடம்பெறும் சுதந்திர தின நிகழ்வில் உஷா உதுப்பின் இசை நிகழ்ச்சி



கொழும்பு, ஒக. 15

இந்தியாவின் 71 ஆவதுசுதந்திரதினவைவத்தை முன்னிட்டு இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் ஏற்பாடு செய்துள்ள கொண்டாட்ட நிகழ்வில் இந்திய பிரபல பாடகி உஷா உதுப் பாடவுள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான இந்திய சுதந்திர கொண்டாட்ட நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது.

இவரதுஇசைநிகழ்ச்சி இன்று புதன்கிழமை மாலை 6.45 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசைத்துறையில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தடம் பதித்துள்ள திருமதி உஷா உதுப் இந்தியாவின் உயர்விருதான பத்மஸ்ரீ விருதையும் வென்றுள்ளார்.

இந்த இசை நிகழ்ச்சியை உயர் கல்வி அமைச்சு மற்றும் கலாசார அமைச்சு உள்ளிட்ட பல்வேறு நிறுவங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

# நல்லூரில் நாளை முதல் புத்தக கண்காட்சியும் விற்பனையும்

இராமகிருஷ்ணா மிசன் வெளியீடுகளின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நல்லூர் முருகன் உற்சவ ஆரம்ப தினமான நாளை 16 ஆம் திகதி முதல் 11.09.2018 வைரவர் மடை வரையான காலப் பகுதி வரை இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதானமடத்தில் தினசரி மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும். தேர், தீர்த்தத் திருவிழாக்களின் போது மட்டும் காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை முழு நேரமாகத் திறக்கப்பட்டிருக்கும்.

சிறுவர்கள், பெரியவர்கள் என அனைத்துத் தரப்பினருக்குமான ஆன்மிகம், தியானம் யோகாசனம், ஆளுமை வளர்ச்சி, ஆன்மிகக் கதைகள் உள்ளடங்கிய நூல்களும், திருக்கைலாசம், தெய்வத் திருமூவர், சுவாமி விவேகானந்தர் படங்களும், தேவாரம், பஜகைப் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்களும் விற்பனைக்கு வைக்கப்படும். (இ

# தினசரி ராசி பலன் (15.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 30 ஆம் நாள் புதன்கிழமை. பஞ்சமிதிதி ப.இ.1.52 மணி வரை பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: அத்தம் மாலை 4.13 வரை பின்னர் சித்திரை. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 12.14 மணி முதல் 1.47 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.34 மணி முதல் 6.05 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை பஞ்சமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- அத்தம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். உழைக்கும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் நன்மை அடைவார்கள்.

**ரிஷபம்** யோகமான நாள். பணபலம் பெருகும். வெளிநாட்டுத் தொடர்புகளால் வியாபாரம் முன்னேற்றம் அடையும். அரசு சலுகையால் சிலருக்கு வீடு, காணி என்பன கிடைக்கும்.

**மிதுனம்** யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். தொழில் விருத்தி குன்றும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரிக்கும்.

**கடகம்** சம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். தொழிலில் கடுமையாக உழைக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் லாபம் குறையும்.

**சிம்மம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு மதிப்பு அதிகரிக்கும்.

**கன்னி** உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் முன்னேற்றமடையும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். பெண்களுக்கு சுய தொழில் மேன்மை அடையும்.

**துலாம்** கவலையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். சுய தொழில் வருவாய் குறையும்.

**விருச்சிகம்** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வியாபாரம் அலாதியாக நடக்கும்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். உடலாரோக்கியம் குன்றும். குடும்பத்தில் சுமாரான அமைதி காணப்படும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும்.

**மகரம்** ஆக்கபூர்வமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். இழந்து போன சொத்துக்கள் திரும்ப வந்து சேரும். வியாபாரத்தில் அபிவிருத்தி உண்டாகும்.

**கும்பம்** சலனம் மிகுந்த நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும். கடன் வியாபாரத்தால் தொல்லைகள் உண்டாகும். திருமண முயற்சியில் கருமம் கைகூடுவது கடினம்.

**மீனம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். தேக சுகம், குடும்ப சுகம் பாதிப்படையும். உத்தியோகத்தர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

**சந்திராஷ்டம நாள்; அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# சீரற்ற காலநிலையினால் 46 குடும்பங்கள் முகாம்களில்




மலையகத்தில் கடந்த சில நாள்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையில் ஹற்றன் மற்றும் நுவரெலியா பகுதிகளில் 46 குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன என நுவரெலியா மாவட்டத்திற்கு பொறுப்பான இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஹற்றன் டிக்கோயா எட்லி தோட்டத்தில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேர் மண்சரிவு அபாயம் காரணமாக எட்லி தோட்ட தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக பாதுகாப்பு கருதி தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட நானுஓயா டெஸ்போட் கீழ்பிரிவு தோட்டத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மண்சரிவு காரணமாக அத்தோட்டத்தின் 13 ஆம் இலக்க தொடர் குடியிருப்பில் வாழும் 9 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் இடம்பெயர்ந்து டெஸ்போட் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து இடைக்கிடையே பெய்து வரும் கனமழை காரணமாக அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா போன்ற பிரதேசங்களில் மண்சரிவுகள், வீதி விபத்துக்கள் என இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வற்றாப்பளை பிள்ளையார் ஆலயத்தின் பாற்குடப் பவனி



வற்றாப்பளை – ஞானமூர்த்தி பிள்ளையார் ஆலயத்தின் பாற்குடப் பவனி சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளதுடன், இதன்போது விசேட வழிபாட்டுபூஜைகள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் கொடிய யுத்தப்பிரதேசத்திற்குள் சிக்கிய பொதுமக்கள் யுத்த சூழலில் இருந்து மீள வேண்டும் என்று ஞானமூர்த்தி பிள்ளையாரிடம் வேண்டி நேர்த்திக்கடன் ஒன்றை வைத்துள்ளனர்.

குறிப்பாக தாய்மார் தமது பிள்ளைகள் உயிருடன் மீளவேண்டும் என்று ஞானமூர்த்தி பிள்ளையாரிடம் வேண்டியுள்ளனர்.

இதன் அடிப்படையில் 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் பின்னர் முல்லைத்தீவில் மீள்குடியேறிய 108 இற்கும் அதிகமான பெண்கள் ஆண்டு தோறும் இந்த நேர்த்திக் கடனை நிறைவேற்றி வருகின்றனர்.

இதன்படி நேற்று முன்தினம் காலை ஞானமூர்த்தி பிள்ளையார் ஆலயத்தில் பாற்குடம் ஏந்திய 108 இற்கும் அதிகமான பெண்கள் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் நோக்கி சென்று தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலவச வழிகாட்டல் வகுப்புக்கள்

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 3 இற்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

விண்ணப்பித்த சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ

# பாடசாலை சீருடை துணிக்கான வவுச்சர் அடுத்த மாதம்!

பாடசாலை சீருடை துணிக்கான வவுச்சர் அடுத்த மாதம் வழங்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அடுத்த மாதம் முதல் வவுச்சர்களை மாணவர்களுக்கு வழங்குவது கல்வி அமைச்சின் இலக்காகும்.

அரச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும், பிரிவெனாக்களில் கற்கும் பிக்குகளுக்கும் இந்த வவுச்சர் வழங்கப்படவிருக்கிறது.

இதற்கென அரசு இந்த ஆண்டில் 250 கோடி ரூபாவை செலவிடுகிறது.






முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் இணைத்தலைவர்கள்; அமைச்சர் ரிஷாத் பதியூதீன் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்றுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலாளர் மற்றும் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாணசபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், மற்றும் துணுக்காய் பிரதேச சபை தவிசாளர், மற்றும் உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது கிரவல் அகழ்வு தொடர்பில் பல மணி நேரம் விவாதிக்காப்பட்டதோடு குடிதண்ணீர் பிரச்சினை கல்வி, சுகாதாரம் காணிப்பிணக்குகள் நீர்ப்பாசனக் குள புனரமைப்பு பணிகள் வீதி பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (இ – 8)

காலைக்கதிர்
Kalaikkathir



# மகளிர் விவகார அமைச்சரால் கால்நடை வளர்ப்புக்கான உதவி





கிளிநொச்சி, ஓக. 15

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் ஆடு, மாடு வளர்ப்பிற்கான உதவு தொகை மற்றும் கோழி வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபையின் 2018 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி மற்றும் பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 07 குடும்பங்களுக்கே இவ்வாறு கால் நடை வளர்ப்புக்கான வாழ்வாதார உதவிகளை வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் வழங்கினார்.(இ

# திருகோணமலையில் 'களவாக' மின்சாரம் பெற்ற மூவர் விளக்கமறியலில்!

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருட்டு மின்சாரம் பெற்ற மூவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்களை நேற்று திருகோண மலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, கன்னியா, அண்ணாமலைவெளி பகுதிகளைச் சேர்ந்த 50,72 மற்றும் 36 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த சந்தேகநபர்கள் வீட்டுக்கும், வீட்டுத்தோட்டங்களுக்கும் திருட்டு மின்சாரத்தைப் பயன்படுத்தி நீர் இறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையிலே திருகோணமலை பிராந்திய மின்சார சபையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸாரும், மின்சார சபையினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது மூவரையும் கைது செய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 154 காட்டு யானைகள் உயிரிழப்பு!

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில், 154 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என வன ஜீவராசிகள் திணைக்களத்தின் யானை பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் யு.எல்.தௌபிக் தெரிவித்துள்ளார்.

வெடி வைத்து அதிகளவான யானைகள் கொல்லப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான யானைகள் உயிரிழந்துள்ளன.

இதேவேளை, யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 58 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

50- 60 வயதையுடைய ஆண்களே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர் என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் அரசு தோல்விகண்டுள்ளது என்கிறார் சம்பிக்க!



அரசு முகம் கொடுத்துள்ள சவால்களை எதிர்கொள்ள வேண்டுமானால் மக்கள் தேசிய அரசு மீது கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களுக்கு அரசு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஊழல்களை இல்லாதொழித்து நீதியான ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவே மக்கள் தேசிய அரசுக்கு தனது விருப்பை வழங்கியிருந்தனர். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் அரசு இன்று தோல்வியடைந்துள்ளது.

எவன்காட் பிரச்சினையில் இருந்து மத்திய வங்கி பிணைமுறி மோசடி வரையில் மக்களின் எதிர்ப்பார்ப்புக்கு பாதகமாகவே அமைந்திருந்தது.

ஆகவே அரசு முகம் கொடுத்துள்ள சவால்களை எதிர்கொள்ள வேண்டுமானால் மக்கள் தேசிய அரசு மீது கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிண்ணியா தளவைத்தியசாலை இடவசதி பற்றாக்குறை! வெளியில் நோயாளர்கள்



திருகோணமலை ஓக. 15

கிண்ணியா தள வைத்திய சாலையில் சில தொகுதிகளில் இடப்பற்றாக்குறை காணப்படுகிறது என வெளிநோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வெளி நோயாளர்கள் தெரிவிக்கையில் –

கிண்ணியா தளவைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை காரணமாக வார்ட் தொகுதிக்கு வெளியில் நடை பாதையில் தாங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டியுள்ளது.

இந்த வைத்திய சாலையின் ஆறாம் வார்ட் தொகுதியில் தான் இவ்வாறான நிலை காணப்படுகின்றது.

இது தவிர பிரசவ விடுதியிலும் கட்டில்கள் பற்றாக்குறை உள்ளதாகவும் அறிய முடிகிறது.

இடவசதியின்மையால் வெளியில் நடை பாதையில் சிகிச்சை பெறவேண்டியுள்ளது. நோயாளிகளால் அங்கலாய்க்கப்படுகிறது.

பெயரளவில் மாத்திரம் கிண்ணியா தளவைத்தியசாலை என பெயரிடப்பட்டுள்ளது நோயாளிகளின் உயிருக்கு உத்தரவாதமளிப்பது யார்?

கிண்ணியா தளவைத்தியசாலைக்கு அதனை அண்டிய பிரதேசங்களில் இருந்தும் பல நூற்றுக் கணக்கானோர் சிகிச்சைகளுக்கும் வெளிநோயாளர் பிரிவுக் கும் அன்றாடம் வருகை தருகின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# முஸ்லிம் ஊழியர்களின் சம்பளத்தை முன்கூட்டி வழங்குக: அமைச்சர் பைசல்

கொழும்பு, ஓக. 15

புனித ஹஜ் பெருநாள் இந்த மாதம் 22ஆம் திகதி கொண்டாடப்பட இருப்பதால் முஸ்லிம் அரச ஊழியர்களின் சம்பளத்தை முன்கூட்டியே வழங்குங்கள் எனச் சுகாதார,போசாக்கு மற்றும் சுதேச பிரதி அமைச்சர் பைசல் காசீம் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

இந்த மாதம் 22ஆம் திகதி புனித ஹஜ் பெருநாள் தினமாக இருப்பதால் முஸ்லிம்கள் பெருநாளைக் கொண்டாடுவதற்குத் தேவையானவற்றை இப்போதே செய்ய வேண்டியுள்ளது.

முஸ்லிம் அரச ஊழியர்களின் சம்பளத்தை முன் கூட்டி வழங்கினால் அவர்களின் தேவையை இலகுவாக நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.

ஆகவே, அவர்களின் நன்மை கருதி இன்னும் ஓரிரு நாள்களுக்குள் அவர்களது சம்பளத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பிரதி அமைச்சர் பைசல் காசீம் அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளார்.

## யால சரணாலயத்தின் ஒரு பகுதி மட்டும் 2 மாதங்கள் பூட்டு

யால தேசிய சரணாலயத்தின் ஒரு பகுதி இரு மாத காலத்துக்கு மூடப்படவுள்ளது என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் செப்டெம்பர் 01 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31ஆம் திகதிவரையான இரு மாத காலங்களுக்கு, யால தேசிய சரணாலயத்தின் வலய இலக்கம் 01 மூடப்படவுள்ளதோடு, ஏனைய பகுதிகள், சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்திருக்கும்.

சரணாலயத்தில் காணப்படும் சுற்றுலா விடுதிகளில் மேற்கொள்ளவுள்ள திருத்தப் பணிகள் காரணமாகவே, சரணாலயத்தின் குறித்த வலயம் மூடப்படவுள்ளது என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# கூரைக்குமேல் அல்ல, எங்கு ஏறி போராட்டம் நடத்தினாலும் அசையமாட்டோம் என்கிறார் அமைச்சர் தலதா அத்துக்கோரள

சிறைக்கைதிகள் கூரைக்குமேல் அல்ல, வேறு எங்கு ஏறி நின்று ஆர்ப்பாட்டம் செய்தாலும் வழக்கு நடவடிக்கைகள் வழமையான முறையிலேயே இடம்பெறும். அதில் மாற்றம் மேற்கொள்ளமுடியாது என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

தாமதமாகிக் கொண்டிருக்கும் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக்குமாறும் தங்குமிட வசதிகள் மற்றும் ஆகாரபான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும்கோரி வெலிக்கடை சிறைச்சாலைக் கூரைக்குமேல் ஏறி பெண் சிறைக்கைதிகள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்தனர்.

இதுதொடர்பாக ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –



வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண் கைதிகள் சிலர் சிறைச்சாலைக் கூரைக்குமேல் ஏறி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் என எனக்கு தகவல் கிடைத்தது. இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளரிடம் கேட்டறிந்து கொண்டேன். அவர்கள் கூரைக்குமேல் அல்ல, வேறு எங்கு ஏறி நின்று ஆர்ப்பாட்டம் செய்தாலும் வழக்கு நடவடிக்கைகள் வழமையான முறையிலேயே இடம்பெறும். அதில் மாற்றம் மேற்கொள்ள முடியாது.

அத்துடன், யாருக்கு வேண்டுமானாலும் ஆர்ப்பாட்டம் நடத்தும் சுதந்திரத்தை நாங்கள் நாட்டில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். முன்னர்போல் ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் மீது நாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளமாட்டோம்.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி சிறைக்குச் சென்றவர்களில் 27 பேர் கொலை செய்யப்பட்டதற்கு கேள்வி தயாரித்ததுபோல் நாங்கள் கேள்வி தயாரிப்பதில்லை. அதனால் நாங்கள் மிகவும் நிதானமாக சிந்தித்து இந்த பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்போம்.

அத்துடன் சிறைச்சாலைகளுக்குள் சட்டவிரோத நடவடிக்கைகள் இன்னும் இடம் பெற்றுவருகின்றமையை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை நாம் எப்படியாவது கட்டுப்படுத்துவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir





- தசுன் ராஜபக்ஷ -

# நீதிமன்ற அவமதிப்பும் ஞானசார தேரரும்

உடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை காணாமற் போகச் செய்தமை தொடர்பான முறைப்பாட்டை ஹோமாகம நீதிமன்றம் 2016 ஜனவரி 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. அப்போது ஹோமாகம மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு சென்ற சந்தியா எக்னெலிகொட விரும்பத்தகாத சம்பவமொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அன்று நீதிமன்றத்துக்கு வந்திருந்த பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், வழக்கின் சந்தேக நபர்களான இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் 9 பேரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் ரங்க திஸாநாயக்கவை ஏசியதுடன், அவர் பெற்றுக் கொடுத்த விளக்கமறியல் உத்தரவை விமர்சனம் செய்தது நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடை பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலாகும்.

அது மாத்திரமல்ல பாதிப்புள்ளானவர்கள் சார்பில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணிக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததுடன் அந்த தேரர் நீதிமன்றில் நடந்து கொண்டவிதம் போல் சரித்திரத்திலேயே இந்நாட்டில் யாருமே நடந்து கொள்ளவில்லை.

அத்துடன் நின்றுவிடாமல் ஞானசார தேரர் நீதிமன்றத்தில் இருந்த சந்தியா எக்னெலிகொடவிடமும் சென்று மரண அச்சுறுத்தல் விடுத்தது சட்டத்தை ஒரு பொருட்டாகக் கருதாததால் ஆகும். பலவிதமான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாளைய தினம் பற்றிய பயத்துடன் இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த சந்தியா எக்னெலிகொட, தன்னை பயமுறுத்தியது தொடர்பாக ஞானசார தேரருக்கு எதிராக ஹோமாகம பொலிஸில் முறையிட்டார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ஹோமாகம மாஜிஸ்திரேட் ரங்க திஸாநாயக்கவும் தேரருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் முறைப்பாடொன்றை தாக்கல் செய்தார். உப்பைத் தின்றால் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று சொல்வார்கள். அதேபோல் முதலில் சந்தியா எக்னெலிகொட அளித்த முறைப்பாட்டுக்காக வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவருக்கு எதிரான குற்றங்களுக்கு ஞானசார தேரர் குற்றவாளியென முடிவு செய்த ஹோமாகம மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஆறு மாதம் கழிந்து போகக் கூடியவாறு ஒரு வருட சிறைத் தண்டனை விதித்தது. அத்தண்டனைக்கு மேலதிகமாக 3000 ரூபா தண்டப் பணமும் நியமித்த நீதிமன்றம் பாதிப்புக்குள்ளான சந்திகா எக்னெலிகொடவுக்கு 50 ஆயிரம் ரூபா நட்டஈடும் வழங்குமாறு ஞானசார தேரருக்கு உத்தரவிட்டது.

ஞானசார தேரர் சிறையில் இருந்த வேளையில் சமூகத்தில் பலவிதமான கதைகள் உருவாகின. எவ்வாறாயினும் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஹோமாகம மாஜிஸ்திரேட் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடொன்றை தாக்கல்செய்து அவருக்கு பிணையைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தனர்.

அதன் பின்னர் கடந்த 8 ஆம் திகதி ஹோமாகம மாஜிஸ்திரேட்டும் தற்போதைய கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட்டுமான ரங்க திஸாநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றில் செய்திருந்த முறையீட்டுக்கான தீர்ப்பும் வழங்கப்பட்டது.

அதில் ஞானசார தேரருக்கு எதிராக நீதிமன்றத்தின் ஆதிபத்தியம் மற்றும் மதிப் புக்கு சவால் விடுத்தமை, அகௌரவம் புரிந்தமை மற்றும் அவமானப்படுத்தியமை, நீதிமன்றத்தில் கலகம் விளைவிக்கும் விதத்தில் நடந்து கொண்டமை, நீதிமன்ற அதிகாரத்திலுள்ளவருக்கு சவால் விடுத்தமை போன்ற நான்கு குற்றங்களுக்கு 6 வருடங்களில் கழிக்கக் கூடியதான 19 வருட கடும் காவல் சிறைத்தண்டனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது.

## இதுகாலவரை எவருமே இழைத்திருக்காத தவறு

அத்தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் பிரீதி பத்மன் சூரசேன, சிரான் குணரத்ன ஆகிய நீதிபதிகள் குழாம் வழங்கியது. குற்றஞ்சாட்டப்பட்ட தேரருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்த நான்கு குற்றங்களுக்கும் நடத்தப்பட்ட வழக்கு விசாரணையின் போது இரு தரப்பாரும் சாட்சிகளை முன்வைத்திருந்தார்கள். கிரம தேவிந்த, மந்திம் பிடிகல தம்மதின்ன ஆகிய தேரர் கள் இருவரும் குற்றஞ்சாட்டப்பட்ட ஞான சார தேரர் சார்பில் சாட்சியம் வழங்கினார் கள். அங்கு சாட்சியம் வழங்கிய தேரர், வெள்ளைக்காரர்களின் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என குறிப்பிட்ட தினத்தில் கூறினார் என்றும் அது நீதிமன்றத்தை அவமதிக்கும் நோக்கில் அல்ல எனவும் குறிப்பிட்டார்கள். அந்த சாட்சியங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டது.

அதனால் குற்றஞ்சாட்டப்பட்டவரான தேரர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிட்டதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்ததற்கான போதியளவு சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதைத் தவிர குற்றஞ்சாட் டப்பட்ட தேரருக்கு எதிராக முன்வைக்கப் பட்ட அனைத்து குற்றங்களும் எவ்வித சந்தேகமுமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன என்பது நீதிமன்றத்தின் எண்ணம் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகவீனம் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கிய வேளையில் நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை. அதனால் தீர்ப்பை 48 மணித்தியாலங்களுக்குள் ஞானசார தேரரிடம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் குற்றஞ்சாட்டப் பட்டவர் சார்பில் ஆஜரா கியிருந்த ஜனாதிபதி சட் டத்தரணி மனோஹார த சில்வா இந்த தீர்ப்பிற்கு எதிராக மேன் முறையீடு செய்ய எண்ணியுள்ளதால் அதன் தீர்ப்பு வரும் வரை ஞானசார தேரரை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லாமல் சிகிச்சை பெறும் வைத்தியசாலையில் வைத்திருக்குமாறு நீதிபதிகள் குழாமிடம் வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோளை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் வழக்குத் தீர்ப்பு தொடர்பாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி குறிப்பிட்ட மேன்முறையீட்டை செய்யும்படி கூறியது. *

# இத்தாலியில் மேம்பாலம் இடிந்து வாகனங்கள் பல பெரும் சேதம்





இத்தாலியின் ஜெனோவா நகரில் விரைவு நெடுஞ்சாலை மேம்பாலம் இடிந்து விழுந்த விபத்தில் பாலத்தின் அடியில் சிக்கி ஏராளமான வாகனங்கள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டள்ளது. இத்தாலியின் வடமேற்கில் மலைகள் சூழ்ந்த பகுதியில் ஜெனோவா நகரம் அமைந்துள்ளது. மலைகளுக்கு இடையில் கொன்கிரீட் தூண்களை அமைத்து அவற்றின் மீது உருவாக்கப்பட்டுள்ள சாலைகள் வழியாகவே வாகன போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இடையில் சில வாய்க்கால் மற்றும் கால்வாய் பாலங்களும் உள்ளன. இந்நிலையில், ஜெனோவா நகரின் மேற்கில் பிரபல தொழிற்பேட்டை அருகே அமைந்துள்ள பு10 நெடுஞ்சாலையில் இருக்கும் மோரான்டி என்னும் மேம்பாலத்தின் ஒருபகுதி இன்று திடீரென்று இடிந்து விழுந்தது. அந்த பாலத்தின் சுமார் 200 மீற்றர் நீளத்திலான பகுதி சுமார் 100 அடி ஆழத்தில் நொறுங்கி விழுந்ததால் அப்போது அவ்வழியாக சென்ற பல வாகனங்கள் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ளன.

அவற்றை மீட்கும் பணியில் மீட்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விபத்தில் இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி 22 பேர் பலியாகி உள்ளனர் என அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.



# தமிழ் தலைவனின் மரணத்தை கொண்டாடும் வக்கிர மனநிலை!

**● கருணாகரன்**

(நேற்றைய தொடர்ச்சி)

ஈழவிடுதலை ஆதரவினால் கருணாநிதிக்கு ஏற்பட்ட நெருக்கடிகளும் விடுதலை இயக்கங்களுக்குள் ஏற்பட்ட மோதல்கள், அரசியல் முரண்பாடுகள், இயக்கங்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் போன்றவற்றினால் எழுந்த வெறுப்பும் நம்பிக்கையீனமும் அவரை ஈழ அரசியலில் இருந்து இரண்டாம் பட்சமாக்கியது.

இதனால் பின்னாளில் கருணாநிதியின் ஈழ ஆதரவு நிலைப்பாடும் ஈழ விடுதலைக்கான பங்களிப்பும் ஏதோ என்ற அளவில் சம்பிரதாயமானதாக மாறியது. விசுவாசத்தன்மை குறைந்தது.

ஆனாலும் ஒருபோதுமே அவர் ஈழப் போராட்டத்துக்கு எதிர்த்திசையில் நின்றார் இல்லை என்பது வரலாற்று ஆதாரம். அந்தளவுக்கு தெளிவான அரசியல் புரிதலும் உச்ச சகிப்புத்தன்மையும் கொண்டிருந்தவர்.

இருந்தாலும் மத்தியில் வைத்திருக்கும் கூட்டுக்கு ஏற்பவும் மாநிலத்தில் அவருடைய நிலைக்கேற்பவும் ஈழப் போராட்டத்தைப் பயன்படுத்த விளைந்தது உண்மை. பின்னாளில் இதைத் தன்னுடைய ஒட்டுமொத்த அரசியலுக்குமாகப் பயன்படுத்தினார்.

இதனால் 1995 இல் நடத்திய ஈழ ஆதரவுப் பேரணி, 2009 இல் அவர் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் போன்றவற்றையெல்லாம் பலரும் கேள்வியோடும் கேலியோடும் நோக்கத் தொடங்கினர்.

இன்று கருணாநிதியைப் பற்றி ஈழத் தமிழ் இளைய தலைமுறையினரிடத்தில் எழுந்துள்ள வெறுப்புணர்வும் தவறான புரிதலும் கருணாநிதி உண்டாக்கிய பின்கால அரசியலின் பாற்பட்டது.

ஆனால், இதில் கருணாநிதி ஒருபோதுமே முழுக்குற்றவாளி கிடையாது. அவரை கேள்வி கேட்கும் அளவுக்கும் எதிரி – துரோகி என்று கூறும் அளவுக்கும் அவர் எதிரியும் அல்லர். துரோகியும் அல்லர். ஆனால், சிலவற்றை அவர் செய்திருக்க முடியும். அதுவொன்றும் தமிழீழத்தைப் பெறுவதாக இல்லை.

அதற்கு எளிய உதாரணம் வடக்குக் கிழக்கு மாகாண சபையை அவர் 1990 இல் கலைக்கச் சொன்னது. அந்தக்கட்டளை புலிகளினால் முன்மொழியப்பட்டது. அதை கருணாநிதி ஈ.பி.ஆர்.எல்.எவ் விடம் சொல்லி அதை நிறைவேற்ற முயற்சித்தார்.



அப்பொழுது வடக்குக் கிழக்கு மாகாணசபையின் பொறுப்பிலிருந்தது ஈ.பி.ஆர். எல்.எவ். இது ஈ.பி.ஆர்.எல். எவ்வுக்கும் இடையில் சிறுமுரணையே உண்டாக்கியது. ஆனாலும் கருணாநிதியின் இயல்புப் படி அவர் தான் நினைத்ததைச் செய்து முடித்தார்.

ஆனால் ஒட்டு மொத்தத்தில் ஈழப் போராட்டமும் ஈழத்தமிழரின் அரசியலும் கொண்டிருக்கும் அத்தனை குளறுபடிகளும் கருணாநிதியையும் ஒரு வகையில் பலவீனப்படுத்தின. இதனால் அவர் ஒரு எல்லைக்குட்படுத்தியே தன்னுடைய பிற்காலத்தைய அரசியலை மேற்கொண்டார். அல்லது அந்த நிலைக்கு ஈழத்தமிழர்களால் – இயக்கங்களால் தள்ளப்பட்டார்.

இந்த நிலையில் எப்படி அவருடைய மரணத்தை நாம் கொண்டாட முடியும்? அதற்காக நாம் வெட்கப்பட வேண்டுமே தவிர, ஒரு போதுமே மகிழ முடியாது.

தி.மு.க என்பது மாபெரும் மக்கள் அமைப்பு. அது ஒரு காலத்தில் செய்த காத்திரமான பங்களிப்பை இத்தகைய அபத்துவமான கொண்டாட்டங்கள் கேலிப் படுத்தும் போது அவ்வளவு மக்கள் திரளையும் நாம் அவமதிக்கிறோம். அவர்களுடைய பங்களிப்பை நிராகரிக்கிறோம். மறந்து விடுகிறோம்.

இது எதிர்கால ஈழத்தமிழர்களின் அரசியலுக்கு ஒரு போதுமே நல்லதல்ல.

இந்தத் தவறுக்கு அடிப்படையாக சில காரணங்களுண்டு. மாதிரிக்கு அவற்றில் ஒன்றிரண்டைப் பார்த்தால் இது இலகுவில் புரியும்.

திராவிட இயக்கப்பாரம்பரியத்திலிருந்து வந்த கருணாநிதி, பெரியார், அண்ணாத்துரை ஆகியோரின் அரசியல் சித்தாந்தங்களையும் செயற்பாட்டுத்திட்டங்களை யும் தொடர்ந்து கடைப்பிடித்தவர்.

தேர்தல் அரசியல் நிர்ப்பந்திக்கும் சமரசங்களை முடிந்தவரை ஒதுக்கி விட்டு திராவிடச் சிந்தனையை செயல்வடிவமாக்க முயன்றவர். கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட வலுவூட்டப்பட்ட திட்டங்களின் பட்டியலைப் பார்த்தால் இது சுலமாகப் புரியும்.



ஈழத்தமிழர்களின் பெரும்போக்கு அரசியல் ஈழ விடுதலை அரசியலின் குறைபாடுகளை அல்லது அதன் மாற்றுச் சிந்தனையை புரிந்து கொண்டவர்கள் கருணாநிதியின் மீது மதிப்பையே கொண்டுள்ளனர். அவர்களிடத்திலும் விமர்சனங்கள் இருந்தாலும் கருணாநிதியை மறுப்பதோ நிராகரிப்பதோ அவர்களிடம் இல்லை.

> **திராவிட இயக்கப் பாரம்பரியத்தை – அந்தச் சிந்தனையை வலுப்படுத்துவதற்குரிய அரசியல் அறிவுப் பண்பாட்டை உருவாக்கியதில் பெரியார், அண்ணாத் துரை, கருணாநிதி ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு. அவர்கள் அதைச் செய்தே தமது அரசியலை முன்னெடுத்தனர்.**

ஈழத்தமிழர்களின் பொதுப்போக்கு அரசியல் எப்போதும் சமூக அக்கறை கொண்டதாக இல்லை. சமூக மாற்றத்தைக் குறித்ததாக இருந்ததில்லை.

இனவாதத்தைக் கட்டமைத்ததாக – அதில் உயிர்வாழ்வதாகவே இருந்திருக்கிறது. இதனால் அது எப்போதும் உட்சுருங்கியதாகவே இருந்துள்ளது. இன்றைய நிலையும் அதுவே.

ஆனால் கருணாநிதியின் திராவிட இயக்க அரசியலில் முற்போக்கான கூறுகளே அடிப்படையாக இருந்தன. அது சமூக நீதி , மாநிலத்தின் உரிமைகள், பால் சமத்துவம், மத மூட நம்பிக்கைகள் தொடர்பான கரிசனை, மொழிவளர்ச்சி போன்றவற்றை வலுவாகக் கொண்டது.

திராவிட இயக்கப்பாரம்பரியத்தை – அந்தச் சிந்தனையை வலுப்படுத்துவதற்குரிய அரசியல் அறிவுப் பண்பாட்டை உருவாக்கியதில் பெரியார், அண்ணாத்துரை, கருணாநிதி ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு. அவர்கள் அதைச் செய்தே தமது அரசியலை முன்னெடுத்தனர்.

இன்றைய தமிழகத்தின் அடையாளம் என்பது அவர்கள் உருவாக்கியதே. இதற்காக அவர்கள் வரலாற்றையும் பண்பாட்டையும் சமூகவியலையும் படித்து தமக்கான அரசியல் சிந்தனையையும் செயற்பாட்டு வடிவத்தையும் உருவாக்கிக் கொண்டனர்.

### தமிழ் அரசியல்வாதிகள் செய்யாததை செய்தவர்கள்

பெரியாரும் அண்ணாத்துரையும்

## அவர்கள் மனநோயாளிகள் அன்றி வேறில்லை

கருணாநிதியும் இதற்காக எழுதிய பக்கங்கள் ஏராளம். படித்தது ஏராளம். இந்தளவுக்கு ஈழ அரசியலில் எவருமே செய்யவில்லை.

உருப்படியாக இரண்டு புத்தகங்களைக் கூட இலங்கைத்தமிழ் அரசியல்வாதிகள் எழுதியிருக்க மாட்டார்கள். மட்டுமல்ல, அரசியலுக்கு அப்பால் அவர்கள் நாடகத்துறையிலும் சினிமாவிலும் ஊடகத்திலும் இலக்கியத்திலும் மொழி மற்றும் பண்பாட்டுத்துறையிலும் பெரும் ஆளுமைகளாக இருந்தனர்.

தவிர, சமூக எற்றத்தாழ்வுக்கு எதிரான நிலைப்பாடு, பகுத்தறிவு போன்றவற்றைத் தன்னுடைய அரசியலில் உள்ளடக்கமாகக் கொண்ட தி.மு.க, இடதுசாரிகளை ஒரு போதுமே எதிரிகளாகப் பார்த்ததில்லை.

ஆனால், ஈழத்தில் இதற்கு எதிர்மாறாகவே நிலைமை இன்னும் இருக்கிறது. மூட நம்பிக்கைகள் பற்றி வாயே திறக்காத நிலை. சமூக மாற்றம் பற்றியோ அதற்கான கலைவடிவங்களைப் பற்றியோ தமிழ்த்தேசியத்தை வலயுறுத்துவோர் பொருட்படுத்துவதே இல்லை.


தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சுகு சிறிதரன் குறிப்பிடுவதைப் போல தி.முகவினர், பொது உடைமைவாதிகளுடன் பல சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்பட்டார்கள். இவர்கள் (ஈழ அரசியல் தலைமைகள்) தீண்டாமை பாராட்டினார்கள்.

அவர்கள் தமிழக மக்களுக்கென சாதித்திருக்கிறார்கள். இங்கு தொடர் வாய்ச்சவாடல். இவர்கள் நாவலர், இராமனாதன் பாரம்பரியம் என்ற பாரம்பரியத்தினராகவும் இன்னும் சிலர் பிரேமாநந்தாவின் சீடப்பிள்ளைகள் என்பதிலும் பெருமை கொள்பவர்கள். அவர்கள் பெரியாரின் வாரிசுகள் என்பதில் பெருமிதம் கொள்பவர்கள்.

எனவே இத்தகைய அரசியல் வேறுபாடுகளே கருணாநிதியின் மரணத்தின் போதும் பிரதிபலித்துள்ளன. தவறாகக் கணக்கைச் செய்தால் தவறாகவே விடையும் கிடைக்கும். ஆனால், இதைக் கடந்தே வரலாறு நிற்கும்.

கருணாநிதி விட்ட தவறை விட பலமான தவறுகளை ஈழத்தமிழ்ச்சமூகம் விட்டுக் கொண்டிருக்கிறது. வடமாகாணசபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கருணாநிதியின் மறைவைக் குறித்து விட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் கருணாநிதியையும் அவருடைய தி.மு.கவையும் நேரடியாகக் குற்றம் சுமத்துகின்றன.

இதாவது பரவாயில்லை என்று சொல் லும் அளவுக்கு ஏனைய தமிழ்த் தலைவர்களோ கட்சிகளோ கருணாநிதியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்ததாக இல்லை.



சமத்துவம் சமூக நீதிக் கான மக்கள் அமைப்பும் வேறு ஒன்றிண்டு தரப்புளும் மட்டும் அஞ்சலி செலுத் தியிருக்கின்றன. மற்றும் படி கருணாநிதி எதிர்ப்புள்ளியிலேயே நிறுத்தப்பட்டுள்ளார்.

கருணாநிதி என்பது தனிப்பட்ட ஒரு மனிதர் அல்லர். அவர் ஓர் இயக்கம். அதை நாம் எப்படி எதிர் கொள்ளப்போகிறோம் என் பதே கவனிக்க வேண்டியது.

இந்தப் பத்தியாளருக்கும் அவருடைய அரசியலில் பல விடயங்கள் ஏற்புடையவை அல்ல. ஆனால், அதற்காக அவரை எதிர்ப்புள்ளியில் நிறுத்துவதற்கு இடமளிக்க முடியாது.

கிளிநொச்சியில் சிலர் அந்த நபர் கொளுத்திய வெடி நம் தலைக்கு நாமே வைத்த வெடியே தவிர வேறொன்றில்லை. ஆம் அவர் தன் தந்தைக்கும் அவருடைய நம்பிக்கைகளுக்கும் அதற்கான மாண்புக்கும் வைத்த வெடியாகும்.

ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச் செல்வனின் வார்த்தைகளில் கேட்டால், 2009 புலிகளின் வீழ்ச்சியை பாற்சோறு கொடுத்துக் கொண்டாடிய சிங்கள மன நிலைக்கும் கருணாநிதியின் இழப்புச் சேதியறிந்து வெடி கொளுத்திய மன நிலைக்கும் இடையில் என்ன வேறுபாடு? *

# வாழைப்பழம் சாப்பிடுவதால் உண்டாகும் நன்மைகள்



ஒரு சாதாரணப் பழவகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதன் மருத்துவ குணங்கள் அதிசயிக்க வைக்கின்றன. வாழைப் பழத்தில் உள்ள விற்றமின் பி6 ஆனது டிரைப்டோபெனாக மாற்றப்படுகிறது. டிரைப்டோபென் சீரோடோனினாக மாற்ற மடைகிறது. இது நமக்கு சாந்த குணத்தைத் தோற்றுவிக்கிறது. டிரைப்டோபென் பின்னர் நியாசினாக மாற்றம் அடைகிறது.

உடலில் உள்ள ஹோர்மோன் குறைபாடுகளை நிவர்த்தி செய் கிறது. வாழைப்பழத்தில் பொட்டாசியம் அதிக அளவில் இருப்பதால் மூளையின் திறனை அதிகரிக்கிறது. நல்ல மனநிலையில் வைத்து கொள்ள துணைபுரிகிறது. நரம்புகளை சீராக வைத்து கொள்கிறது. பொட்டாசியம்ரத்த அழுத்தத்தையும் இதயத்தையும் சீராக இயங்க வைக்கிறது.

நம்முடைய உடலில் சுரக்க கூடிய திரவத்தை சமநிலைப்படுத் துகிறது. உடம்பில் உள்ள செல்களை தூய்மையாகவும் நல்ல ஊட்டச்சத்துடனும் வைத்துக் கொள்கிறது. வாழைப்பழத்தில் காணப் படும் நார்ச்சத்துகள் குடலை சீராக வைக்கிறது. வாழைப்பழத் துடன் பால் கலந்து சாப்பிட்டாலோ அல்லது தேன் கலந்து சாப் பிட்டாலோ அவை வயிற்று சம்பந்தமான நோய்களை குறைக்கிறது.

வாழைப்பூவில் விற்றமின் பி அதிகம் உள்ளது. இந்த பூவை அடிக்கடி சமைத்து உட்கொண்டு வந்தால் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் வயிற்றுவலி மற்றும் குடல்புண், ரத்தபேதி, மூல நோய் ஆகியவை குணமாகும்.

வாழைப்பழத்தில் விற்றமின் ஏ, பி, பி2, சி மற்றும் சுண்ணாம் புச்சத்து ஆகியவை உள்ளன. உணவை எளிதில் சீரணிக்கச் செய்யும் வாழைப்பழம் பித்தத்தை நீக்கக்கூடியதும் கூட. மேலும், உடலில் ரத்தத்தை அதிகரிக்கவும் செய்யும்.

தினம் ஒரு செவ்வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் ஆண்க ளுக்கு உயிரணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பெண்கள் அடிக்கடி வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கு மாத விலக்கு சீராக வரும்.

அடிக்கடி வாழைப்பழம் சாப்பிடுபவர்களுக்கு குடல் புண்கள் வராது. இருந்தால் ஆறிவிடும். மேலும், தோல் பளபளக்கும். வாழைப்பழத்துடன் ஏலக்காய் பொடி சேர்த்து பிசைந்து சாப்பிட பெரும்பாடு குணமாகும்.

வாழைப்பழத்துடன் சீரகம் சேர்த்து சாப்பிட்டு வர ரத்த மூலம் குணமாகும். வாழைப்பழம் அடிக்கடி சாப்பிடுவது அறிவை விருத்தி யடையச் செய்யும்.

செவ்வாழை குருதியை அதிகரிக்கும். மலை வாழைப்பழம் மலச்சிக்கலை போக்கும். பேயன் வாழைப்பழம் அம்மை நோயை குணமாக்கும். பச்சை வாழை உடம்புக்கு குளிர்ச்சி தரும். நேந்திரம் பழம் சருமத்தை பளபளப்பாக்கும். மொந்தன் வாழை உடல் வறட் சியை போக்கும். நாட்டு வாழைப்பழம் குடல் புண்ணை ஆற்றும்.

# ஆட்டு எலும்பு ரசம் தயார்...!



**தேவையான பொருள்கள்**

ஆட்டு எலும்பு - 250 கிராம்
எலுமிச்சை பழம் - 1
மிளகுத் தூள் - 1 தேக்கரண்டி
பூண்டுப் பல் - 4
இஞ்சி விழுது - 1 தேக்கரண்டி
சீரகத்தூள் - 1 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
சிவப்பு மிளகாய் - 2
சாம்பார் வெங்காயம் - 50 கிராம்
நல்லெண்ணெய் - 1 மேசைக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
கொத்துமல்லி - சிறிதளவு

**செய்முறை:**

எலும்புத் துண்டுகளை நன்றாகக் கழுவி, குக்கர் பாத்திரத்தில் போட வேண்டும். எலும்பு மூழ்கும் அளவிற்கு தண்ணீர் ஊற்றி, மஞ் சள் தூள், இஞ்சி விழுது, கொத்துமல்லி, உப்பு சேர்த்து வேக வைக்க வேண்டும். 3 விசில் வந்ததும் 10 நிமிடம் மிதமான சூட்டில் வைத்து இறக்க வேண்டும்.

பத்திரத்தை அடுப்பில் வைத்து, எண ணெய் விட்டு மிளகுத் தூள், காய்ந்த, சீரகத் தூள், பூண்டுப்பல், நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும். எலும்புத் துண்டு வெந்த சாற்றை வடித்து எடுத்து தாளிதத்தில் ஊற்றி கறிவேப்பிலை கிள்ளிப்போட்டு மூடி ஒரு கொதி வந்ததும் இறக்கி வைக்க வேண்டும். பின்பு அதனுடன் எலுமிச்சம் பழச்சாற்றை ஊற்றி கலக்கி பரிமாறலாம். தேவைப்பட் டால் சிறிதளவு மிளகுத்தூள் சேர்த்து கொள்ள லாம். சுவையான மட்டன் ரசம் தயார்.

# 'விளையாடுங்கள், வேட்டையாடாதீர்கள்' யானை குறித்து 10 சுவாரஸ்ய தகவல்கள்



இயற்கையின் தலைசிறந்த படைப்பு யானை என்பார் பிரிட்டிஷ் கவிஞர் ஜோன் டோன். ஆம், பார்க்க பார்க்க அலுக்காத ஜீவன் யானை.

யானைகள் பற்றி பேச எழுத எவ்வளவோ உள்ளன. அத்தனையும் சுவாரஸ்யமானவை. அவற்றில் அடிப்படையான 11 தகவல்களை மட்டும் இங்கு பகிர்கிறோம்.

1. உலகில் பல்லாயிரக்கணக்கான எண்ணிக் கையில் யானைகள் இருந்தாலும், அவை அனைத்தும் இரண்டு வகையை சேர்ந்தவை. ஒன்று ஆசிய யானைகள்; மற்றொன்று ஆபிரிக்க யானைகள்.

2. பெண் ஆசிய யானைகளுக்கு தந்தம் இருக்காது.

3. யானை பிறக்கும் போது சராசரியாக 200 பவுண்டுகள் எடை இருக்கும். இது 30 பிறந்த குழந்தைகளின் எடைக்கு சமமானது.

4. யானைகளுக்கு கண் இமைகள் உள்ளன.

5. ஆபிரிக்க யானைகள்தான் நிலத்தில் வாழும் மிகப்பெரிய விலங்கு. டைனோசர் எல்லாம் நாம் நினைவில் வேண்டுமானால் வாழலாம். இப்போது நிலத்தில் வாழும் விலங்குகளில் யானைகள்தான் பிரம்மாண் டமானவை

6. யானைகளுக்கு பிடிக்காத ஓர் உயிரினம் 'தேனீ'

7. மனிதனின் மொத்த உடலில் உள்ள சதையைவிட யானையின் தந்தத்தில் அதிக சதை உள்ளது.

8. யானைகள் 22 மாதங்கள் கர்ப்பமாக இருந்து குட்டியை ஈன்றெடுக்கும்.

9. யானையின் தந்தம் ஒரு முறை உடைந்தால் மீண்டும் வளராது. பொதுவாக மனிதர்கள் வலது கை பழக்கம் உடையவர்களாக இருந்தாலும், இடதுகை பழக்கம் உடையவர்களும் இருக்கிறார்கள் தானே... அது போல யானைகளையும் நாம் அடையாளப்படுத்தலாம். அதாவது, எந்த பக்க தந்தத்தை அது அதிகம் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்து அதனை அடையாளப்படுத்த முடியும்.

10. உலக வனவிலங்கு நிதியத்தின் கணக்குப்படி, உலகில் இப்போது 4,15,000 ஆபிரிக்க யானைகள் உள்ளன. 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை ஆசிய யானைகள் உள்ளன. எண்ணிக்கையில் பார்ப்பதற்கு அதிகமாக தெரிந்தாலும், இவை அருகிவரும் விலங்கின மாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கு முக்கிய காரணம் வேட்டையாடுதல் தான்.

# பெண்களே செலவைக் குறைக்க சில ஆலோசனைகள்

எவ்வளவு வருமானம் வந்தாலும் போதாது...' என்பதே பெண்கள் பலரின் புலம்பலாக உள்ளது.

போக்குவரத்துச் செலவை கூடியமட்டும் குறைக்க முயலுங்கள். ஒரே பகுதி யில் இருந்து மற்றொரு குறிப்பிட்ட பகுதிக்குச் செல்லும் நண்பர்கள், அடுக்கு மாடிக் குடியிருப்புவாசிகள், வாகனத்தைப் பகிர்ந்துகொள்ளலாம். இது சுற்றுச் சூழலுக்கும் நன்மை சேர்க்கும் விஷயம்.

தேவையில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் ஏ.சி., மின்விசிறி போன்றவற்றை அணைப்பதுடன், குழந்தைகளுக்கும் அப்பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

சில பெரும் நிறுவனங்கள், கடைகள், குறிப்பிட்ட காலத்தில் தள்ளுபடி வழங்குவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள். அதைக் கவனித்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

சிறிய கடைகளில் என்றில்லை, ஆச்சரியப்படுத்தும் வகையில், பெரிய கடை களிலும் பேரம் பேசுவது சில நேரங்களில் பலன் கொடுக்கும். பேரம் பேச கௌரவம் பார்க்க வேண்டாம்.

வெளியிடங்களில் சாப்பிடுவதைக் குறைத்துக்கொள்வது, 'பேர்ஸ்' ஊக்கு மட்டு மல்ல, ஆரோக்கியத்துக்கும் நல்லது.

திரையரங்கில் படம் பார்ப்பது செலவு பிடிக்கும் விஷயமாகிவருகிறது. சிறிது காலம் பொறுத்திருந்தால், முறைப்படி இணையத்திலேயே பணம் செலுத்திப் பார்க்க முடியும்.

'ஜிம்'முக்கு பணம் கட்டிவிட்டு, போகாமல் இருப்பதைவிட, வீட்டி லேயே உடற்பயிற்சி மேற்கொள்ளலாம்.

பழையதாகிவிட்டது என்பதாலேயே ஒரு பொருளை தூக்கிப் போட்டுவிடாமல், அதிகபட்சம் எவ்வளவு நாள் முடியுமோ அவ்வளவு நாள்களுக்குப் பயன் படுத்தலாம்.



வீட்டில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவருக்கும் தனித்தனி கைபேசி அவற்றுக்கான செலவு தேவையா என யோசியுங்கள்.

பணமாக எடுத்துக் கொடுப்பதைவிட, கிரெடிட் கார்டை பயன்படுத்தும்போது நாம் அதிகம் செலவழித்துவிடுகிறோம். எனவே கிரெடிட் கார்டை 'பேர்ஸ்' விட்டு வெளியே எடுப்பதை கூடியவரை தவிருங்கள்.

# கிண்ணியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி!

கிண்ணியா – தம்பலகாமம் தெலுங்குநகர் உள் வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முந்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பலகாமம் தெலுங்குநகர் உள் வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் தம்பலகாமம், தெலுங்கு நகர் பகுதியைச் சேர்ந்த நாகராசா ஐங்கரன் (41வயது) என்பவரே உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

## உருகுலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு!

அனுராதபுர மாவட்டத்தில் உள்ள கல்கொடவல பிரதேசத்தில் கலாவெவ தேசிய பூங்காவில் உருகுலைந்த நிலையில் நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நபர் சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், சடலம் மீட்கப்பட்டுள்ள இடம் யானைகள் நடமாடும் பகுதி எனத் தெரிவித்துள்ளது.

சடலமாக மீட்கப்பட்டுள்ளவர் 40 முதல் 50 வயதிற்கு இடைப்பட்டவர் என்பதுடன், அவர் தொடர்பில் இது வரை அடையாளம் கண்டுகொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்

இவர் காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்தாரா? அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்பது தொடர்பில் உறுதி செய்ய கல்கிரியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆழ்கடலில் சுகவீனமுற்ற மீனவர் கடற்படையால் மீட்பு

திருகோணமலை கடற்கரைப் பிரதேசத்தில் இலங்கை கடற்படையின் "P-439" அதிவிரைவு தாக்குதல் படகின் மூலம் சுகவீனமுற்ற மீனவர் ஒருவர் சிகிச்சைக்காக கரைக்கு கொண்டு வரப்பட்டார்.

இந்த மீனவர் 'சாரா – II' மீன்பிடி படகில் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக திருகோணமலையிலிருந்து இம் மாதம் இரண்டாம் திகதி புறப்பட்டுச் சென்றிருந்தார்.

இவ்வேளையில் அவர் உடல் நலம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இம்மீனவரின் சுகவீனம் தொடர்பாக மீன்பிடி மற்றும் கடற்றொழில் திணைக்களத்தினால் இலங்கை கடற்படைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் இலங்கை கடற்படையினர் அதிவிரைவு தாக்குதல் படகின் மூலம் அந்த நபரை தேடி விரைந்தனர்.

அதிவிரைவு தாக்குதல் படகினால் திருகோணமலையில் உள்ள ஃபவுல் பொயின்ட் கலங்கரை விளக்கிலிருந்து 90 கடல் மைல் தொலைவில் 'சாரா – II' மீன்பிடி படகு கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்து மாற்றப்பட்டு திருகோணமலை கடற்படைத்தளத்திற்கு அதிவிரைவு தாக்குதல் படகின் மூலம் நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்ட மீனவர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை அரச வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# நாட்டின் வளர்ச்சிக்கு சிறிய, நடுத்தர தொழில் முனைவோரின் பங்களிப்பு மிகவும் அவசியம்!

## இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 15

நாடு முன்னேற வேண்டுமானால் கூடுதலான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் இருக்க வேண்டுமென இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்தில் 'என்டர் பிரைஸ் ஸ்ரீலங்கா' கண்காட்சியை நேரில் பார்த்த இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன கண்காட்சி தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு –

'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு இலட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க



முனைய வேண்டும்.

இலங்கையின் சனத்தொகையில் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை 3 சதவீதத்தையேனும் எட்டவில்லை. வியட்நாம், தாய்லாந்து முதலான நாடுகளில் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை அதிகமாகும். 'என்டர் பிரைஸ் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபா தொடக்கம் 75 கோடி ரூபா வரையான கடன் திட்டங்கள் உள்ளன.

இது தொழில் முயற்சியாளர்களுக்கான திட்டமாகும். இந்தத் திட்டத்திற்காக கொண்டுவரப்படும் பிரேரணைகளை வங்கியொன்று அங்கீகரிக்குமானால் அனுகூலம் பெறலாமென அமைச்சர் விக்ரமரத்ன மேலும் தெரிவித்தார்.

# சுவீடன் குடும்பத்தினரை தாக்கிய விமானப்படையின் உயர் அதிகாரி

## நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சை

இலங்கை விமானப்படையின் கட்டுநாயக்க இராணுவ முகாமில் பணியாற்றும் உயர் அதிகாரி ஒருவர் சுவீடன் குடும்பத்தினரை கடுமையாக தாக்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சுவீடன் நாட்டவர் நீர்கொழும்பில் உள்ள தனது வீட்டில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் 51வயதான சுவீடன் நாட்டை சேர்ந்தவர். எனது பெயர் பியூரலின். நான் சுவீடன் நாட்டின் மருந்து உற்பத்தி நிறுவனத்தின் கட்டுபாட்டு பொறியியலாளராக செயற்படுகின்றேன். எனது மனைவி இலங்கை பெண் ஆவார். எனினும் அவர் தற்போது சுவீடன் குடியுரிமையை பெற்றுள்ளார். தற்போது நானும் எனது மனைவி மற்றும் பிள்ளைகள் சுவீடனில் நிரந்தரமாக குடியேறியுள்ளோம்.

நாங்கள் இரண்டு மாத விடுமுறைக்காக இலங்கை வந்தோம். இலங்கை சுற்றுலா வர்த்தகத்திற்காக பல கோடி ரூபாய் செலவிட்டு, நீர்கொழும்பில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக வீட்டுத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டோம்.

கடந்த 30 ஆம் திகதி எங்களுக்கு சொந்தமான மோட்டார் வாகனத்தை வீட்டிற்கு முன்னால் நிறுத்தி வைத்தோம். நாங்கள் வாகனத்தை நிறுத்தி வைத்த இடத்திற்கும் 7 லட்சம் ரூபாய் செலவிட்டு நாங்களே நிர்மாணித்தோம். எனினும் அந்த வீதியில் எங்கள் வாகனத்தை நிறுத்த எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதன்போது இலங்கை விமானப் படையின் கட்டுநாயக்க இராணுவ முகாமில் சேவை செய்யும் உயர் அதிகாரி ஒருவரும் இரண்டு பெண்களும் வன்முறையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர்.

அதன் பின்னர் அதிகாரி வாகனத்தின் ஜன்னலை தாக்கி உடைத்தார். எனது மனைவியையும் தாக்கினார். அவரை தூக்கி கீழே அடித்தார்கள். அவரது அடி வயிற்றில் தாக்குதல் மேற்கொண்டனர். என்னையும் கடுமையாக தாக்கினார்கள். இதனால் நாங்கள் இருவரும் கடந்த 3 நாள்களாக நீர் கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தோம்.

இதனால் அச்சமடைந்த எங்கள் பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு அச்சப்படுகின்றார்கள். நாங்கள் இது தொடர்பில் கொழும்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தோம். எனினும் உரிய பதில் கிடைக்கவில்லை. இதனால் எங்களுக்கு நியாயம் பெற்றுத் தருமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் பிரபல நடிகையிடம் பெரும் நிதி மோசடி செய்தவர் கைது



இலங்கையின் பிரபல நடிகையான என்டலீன் ரொஷானாவிடம் பெரும் நிதி மோசடி செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜப்பானில் தயாரிக்கும் சொகுசு ரக மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்து தருவதாக கூறி, 10 லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட திரைப்பட இயக்குநர் நேற்றுமுன்தினம் மிரிஹான விசேட பொலிஸ் குற்ற பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

10 லட்சம் ரூபா பணத்தை மோசடியான முறையில் ஏமாற்றினார் எனக் கூறி இந்த நடிகை மிரிஹான பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் மேல் மாகாண பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் வசந்த விக்ரமசிங்க இந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து விசாரணை மேற்கொண்டு அந்த சந்தேக நபரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளார்.

3 மாதங்களுக்குள் சொகுசு வாகனம் ஒன்றை பெற்றுத் தருவேன் என வாக்குறுதி அளித்த இயக்குநர், அந்த மோட்டார் வாகனத்தை பெற்று தரும் வரை பழைய மோட்டார் வாகனம் ஒன்றை வழங்கினார் என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளில் நேற்றுமுன்தினம் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் நுகேகொட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.


# புதிய வாக்காளர் இடாப்பு மக்கள் பார்வைக்கு; மாற்றங்கள் ஏதும் இருப்பின் அறிவிக்கவும்

## மேலதிக ஆணையாளர் தெரிவிப்பு

சீர்திருத்தம் செய்யப்பட்டு வரும் 2018 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தொடர்பிலான முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹம்மட் தெரிவித்துள்ளார்.

புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியல் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் காரியாலயம் என்பவற்றில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய பட்டியலில் உள்ள பெயர்கள் சரியாக இடம்பெற்றுள்ளனவா என்பதனை வாக்காளர்கள் பரீட்சிக்க முடியும்.

பெயர்ப் பட்டியலில் தமது பெயர்



இல்லையென்றோ அல்லது அதில் யாருடைய பெயராவது விடுபட்டு இருப்பதாகவோ கண்டால், அது குறித்து முறைப்பாடு செய்யுமாறும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த புதிய வாக்காளர் இடாப்பை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பத்தில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டேன்

## குமார் சங்கக்கார அறிவிப்பு

அரசியலில் ஈடுபடும் எண்ணம் ஏதும் தமக்கு இல்லை என்றும், தாம் ஒருபோதும் அரசியலுக்கு வரப் போவதில்லை என்றும், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் குமார் சங்கக்கார வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார் என்று ஊகங்கள் வெளியாகி வந்த நிலையிலேயே, அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஓய்வாக இருக்கவே விரும்புகின்றேன் என்றும், அரசியலில் ஈடுபடும் எண்ணம் தமக்கு ஒருபோதும் இருக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்திலும் அரசியலுக்கு தாம் வரப் போவதில்லை என்றும் குமார் சங்கக்கார வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir




### பாக். நாடாளுமன்றம் கூடியது:

# இம்ரான்கான் உட்பட 329 எம்.பிக்கள் பதவி ஏற்றனர்

இஸ்லாமாபாத், ஓக.15

பாகிஸ்தான் தேர்தலில் வெற்றிபெற்றவர்களில் 329 எம்.பி.க்கள் நேற்று முன்தினம் கூடிய நாடாளுமன்றத்தின் 15 ஆவது அவை கூட்டத்தின் முதல் நாளில் பதவி ஏற்றுக் கொண்டனர்.



342 உறுப்பினர்களை கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் ஆட்சியமைக்கத் தேவையான தனிப்பெரும்பான்மையான172உறுப்பினர்களின் பலம் கிடைக்கவில்லை.

116 இடங்களுடன் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரி இ இன்சாப் கட்சிக்கு 9 சுயேச்சை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். இதன் மூலம் அக்கட்சியின் பலம் 125 ஆக உயர்ந்தது.

அடுத்தபடியாக தேர்தலில் வெற்றிபெற்ற கட்சிகளுக்கு விகிதாசார முறைப்படி பெண் வேட்பாளர்களுக்கு என ஒதுக்கப்பட்ட 60 தொகுதிகள் மூலம் இம்ரான் கட்சிக்கு கூடுதலாக 28 உறுப்பினர்கள் கிடைத்தனர்.

இதேபோல், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்து மொத்தம் 158 உறுப்பினர்களின் ஆதரவுடன் இம்ரான் கானின் தலைமையிலான தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி ஆட்சி அமைக்க உள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி அந்நாட்டின் பிரதமராக இம்ரான் கான் பதவியேற்கவுள்ளார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் 15 ஆவது அவையின் முதல்நாள் கூட்டம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு தொடங்கியது. தேசிய கீதம் இசைக்கப்பட்ட பின்னர், புனித குர்ஆனின் சில வசனங்கள் ஓதியபிறகு அவை நடவடிக்கைகள் தொடங்கின.


முன்னதாக, முதன்முறையாக எம்.பி.யாக வெற்றிபெற்று அவைக்கு வந்த பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரிக்கு இம்ரான் கான் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர், இம்ரான் கான், பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரி, அக்கட்சியின் முன்னாள் தலைவரும் பாகிஸ்தான் முன்னாள் அதிபருமான ஆசிப்அலிசர்தாரி, முன்னாள் ஆளும்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவர் ஷாபாஸ் ஷரிப் உட்பட 329 உறுப்பினர்கள் நேற்று முந்தினம் பதவி ஏற்றுக் கொண்டனர். விரைவில் பதவி விலகவுள்ள சபாநாயகர் அயாஸ் சாதிக், அவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

# ஊழல் வழக்கு விசாரணை: ஷெரீப் நீதிமன்றில் ஆஜர்!

இஸ்லாமாபாத், ஓக.15

அல்-அஜிசியா இரும்பு ஆலை மற்றும் ஹில் உலோக ஆலை தொடர்பான 2 ஊழல் வழக்கு தொடர்பாக நவாஸ் ஷெரீப் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.



பனாமா கேட் ஊழல் வழக்கில் சிக்கித்தகுதிநீக்கம் செய்யப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்மற்றும்அவருடையகுடும்பத்தினர் மீதான ஊழல் வழக்குகளை விசாரிக்க தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத்துக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி லண்டன் அவன்பீல்ட் நகரில் அடுக்குமாடி குடியிருப்பு வாங்கியது, அல் – அஜிசியா இரும்பு ஆலை மற்றும் ஹில் உலோக ஆலை தொடர்பான 3 ஊழல் வழக்குகளை தேசிய பொறுப்புடைமை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதில் அவன்பீல்ட் வழக்கில் நவாஸ்ஷெரீப், அவருடைய மகள்மரியம்நவாஸ், மருமகன்முகமது சப்தார் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டன. அதையடுத்து இந்த வழக்கில் நவாஸ் ஷெரீப்புக்கு 10 ஆண்டுகள், மரியம் நவாஸுக்கு 7 ஆண்டுகள் மற்றும் முகமது சப்தாருக்கு ஓர் ஆண்டு சிறைதண்டனை விதித்து கடந்த மாதம் 6 ஆம் திகதிதீர்ப்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவர்கள் 3 பேரும் ராவல்பிண்டி நகரில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அல் – அஜிசியா இரும்புஆலைமற்றும்ஹில்உலோக ஆலை தொடர்பான 2 ஊழல் வழக்குகள் தேசிய பொறுப்புடைமை நீதிமன்ற நீதிபதி அர்த் மாலிக் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. நவாஸ் ஷெரீப்பை விசாரணைக்கு ஆஜர்படுத்துவதற்காக அவரை பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் அடியாலா சிறையில் இருந்து இஸ்லாமாபாத்தில் உள்ள தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத்துக்கு அழைத்துச்சென்றனர்.

அசம்பாவிதங்களை தவிர்க்கும் விதமாக நீதிமன்றத்திலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வழக்கில் தொடர்புடையவர்கள், நீதிபதி மற்றும் வழக்கறிஞர்கள் தவிர மற்றவர்கள் யாரும் நீதிமன்றுக்குள் நுழைய அதிகாரிகள் தடைவிதித்தனர். பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் நீதிபதி முன்பு நவாஸ் ஷெரீப் ஆஜர்படுத்தப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. அதே சமயம் இந்த வழக்குகளில் தொடர்புடையநவாஸ்ஷெரீபின்மகன்கள் இருவரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை. முந்தைய அவன்பீல்ட் வழக்கிலும் அவர்கள் இருவரும் ஆஜராகவில்லை என்பதும், இதனால் அவர்கள் தலைமறைவாக இருக்கின்றனர் என நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் நிலக்கரி சுரங்க வெடி விபத்தில் 6 பேர் பலி!



இஸ்லாமாபாத்,ஓக.15

பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் இயங்கிவரும் நிலக்கரி சுரங்கத்தில் மீத்தேன் வாயு கசிவால் ஏற்பட்ட வெடி விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தலைநகர் குவெட்டாவில் இருந்து சுமார் 50 கிலோமீற்றர் துரத்திலுள்ள சஞ்சாடி பகுதியில் இயங்கிவரும் நிலக்கரி சுரங்கத்தில் வழக்கம்போல் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர்.

சுமார் 4 ஆயிரம் அடி ஆழத்தில் அவர்கள் பணியில் இருந்தபோது திடீரென்று பூமியின் அடியில் இருந்து பெருமளவில் கசிந்த மீத்தேன் வாயுவினால் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் சுரங்கத்தின் சிறுபகுதி இடிந்து விழுந்தது.

இந்த சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் சிக்கிய மேலும் 13 தொழிலாளர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த கோர விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தாருக்கு பலுசிஸ்தான் மாகாண தற்காலிக முதல் அமைச்சர் அலாவுதீன் மார்ரி இரங்கல் தெரிவித்துள்ளார்.

## தஜிகிஸ்தானில் ஹெலிகொப்டர் விபத்தில் மலையேற்ற வீரர்கள் உட்பட 16 பேர் பலி

துன்பே, ஓக.15

தஜிகிஸ்தானில் மலைப்பகுதியில் அவசரமாக தரையிறங்கிய ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தஜிகிஸ்தான் நாட்டின் மிக உயரமான இஸ்மோலி சோமனி மலைப்பகுதியில் பயிற்சி மேற்கொண்ட 13 மலையேற்ற வீரர்கள் நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் மூலம் அடிவார முகாமிற்குதிரும்பினர். முகாமை நெருங்கியபோதுஹெலிக்கொப்டர் கட்டுப்பாட்டை இழந்துள்ளது. அப்போது அவசரமாக தரையிறக்க விமானி முயன்றுள்ளார். எனினும் ஹெலிக்கொப்டர் மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கியுள்ளது.



இதில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த 13 மலையேற்ற வீரர்கள், 3 பைலட்டுகள் என அனைவரும் இறந்திருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது. ஹெலிகொப்டர் விழுந்த பகுதிக்கு மீட்பு பணிக்காக இரண்டு ஹெலிக்கொப்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது

### பங்களாதேஷ் விடுதலை போர் வேளையில்

## குற்றத்தில் ஈடுபட்ட ஐவருக்கு மரண தண்டனை!

டாக்கா, ஓக.15

பங்களாதேஷ் விடுதலை போரின்போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டதுடன் 17 கொலைகள் மற்றும் 15 பெண்களை பலாத்காரம் செய்த வழக்கில் 5 பேருக்கு நேற்றுமுன்தினம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பங்களாதேஷில் 1971 ஆம் ஆண்டு, பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த சுதந்திரப் போராட்டத்தின்போது ஒரு தரப்பினர் பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டதுடன், கொலை, கொள்ளை, வன்புணர்வு உள்ளிட்ட போர்க்குற்றங்களிலும் ஈடுபட்டனர் என குற்றச்சாட்டு எழுந்தது.

அதைத்தொடர்ந்து, இத்தகைய போர்க்குற்றங்களை விசாரிக்க கடந்த 2010 ஆம் ஆண்டு சர்வதேச கிரிமினல் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப் பட்டது. இங்கு நடைபெற்றுவரும் வழக்குகளின் விசாரணையில், பலருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

விடுதலை போரின்போது பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி அயூப் கானுக்கு ஆதரவாக செயல்பட்டதுடன், பங்களாதேஷின் பட்டுவாகாலி மாவட்டத்துக்கு உட்பட்ட இட்டாபாரியா கிராமத்துக்குள் புகுந்து 17 பேரை கொன்றனர் என (முன்னாள்) பழமை வாத முஸ்லிம் லீக் கட்சியை சேர்ந்த 5 பேர் கடந்த 2015 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டனர்.

மேலும், அதே கிராமத்தில் 15 பெண்களை பலாத்காரம் செய்து, பொது சொத்துகளை சேதப்படுத்தியது. வீடுகளை எரித்து, ஆள் கடத்தல், சித்திரவதை செய்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின்கீழ் பங்களாதேஷ் நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 5 பேருக்கும் முன்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து மூன்று நீதிபதிகளைக் கொண்ட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் அவர்கள்மேல்முறையீடுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கில் தீர்ப்பளித்த தீர்ப்பாயம், 'போர்குற்றத்தின் ஒரு பகுதியாக இவர்கள் 5 பேரும் பெண்களின் கற்பை சூறையாடுவதை ஓர் ஆயுதமாக பயன்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது வாழ்நாள் முழுவதும் இதே மன உளைச்சலுடன் வாழ்ந்துள்ளனர். அவர்களுக்கு நாம் அளிக்க வேண்டிய அங்கீகாரமாக இத்தகைய குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனை விதித்தே ஆக வேண்டும்.

எனவே குற்றவாளிகள் முஹம்மது இஷாக் ஷிக்தர், அப்துல் கனி, முஹம்மது அவால், சத்தார் படா, சுலைமான் மிருதா ஆகியோரை சாகும்வரை தூக்கிலிட்டு கொல்லுமாறு உத்தரவிடுகிறோம் எனத் தெரிவித்துள்ளது.

# கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்த தமிழக முதல்வர் வர வேண்டாமா?



ரஜனிகாந்த் ஆதங்கம்

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி இறுதிச்சடங்கில் இந்தியாவின் அனைத்து தலைவர்களும் வந்த நிலையில், தமிழக முதல்வர் வந்திருக்க வேண்டாமா? என நினைவேந்தல் நிகழ்ச்சியில் ரஜனிகாந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு நடிகர் சங்கம் சார்பில் நினைவேந்தல் கூட்டம் காமராஜர் அரங்கில் நேற்று நடத்தப்படட்டது. இதில், நடிகர் சங்க தலைவர் நாசர், பொதுச்செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நடிகர் ரஜனிகாந்த் உள்ளிட்ட பல நடிகர், நடிகைள், இயக்குநர்கள் மற்றும் திரைத் துறையை சேர்ந்தவர்கள் பங்கேற்று கருணாநிதி உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்த நினைவேந்தல் கூட்டத்தில் தி.மு.க. செயல்தலைவர் ஸ்டாலினும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் ரஜனிகாந்த் உரையாற்றுகையில், மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தி.மு.க. தலைவர் கருணாநிதி இல்லாத தமிழ்நாட்டை என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. இலக்கியம், சினிமா என பல துறைகளிலும் சிறந்து விளங்கியவர். பழையவராகவே, புதியவராகவோ இருந்தாலும், கருணாநிதி இல்லாது அரசியல் செய்ய முடியாது என்ற நிலையை உருவாக்கியவர்.

பல வஞ்சனைகளை தாண்டி அரசியலில் ஜொலித்த கருணாநிதியால் அரசியலுக்கு வந்தோர் லட்சம் பேர் உள்ளனர். அதிமுகவின் ஆண்டு விழாவில் அண்ணா, எம்.ஜி.ஆரின் புகைப்படத்தோடு தி.மு.க. தலைவர் கருணாநிதியின் புகைப்படத்தையும் வைக்க வேண்டும். அ.தி.மு.க. உருவானதற்கு காரணம் கருணாநிதிதான்.

தமிழ்நாட்டில் இனி பெரிய விழா என்றால் மு.க.ஸ்டாலின் யாரை கூப்பிட போகிறார் என்று தெரியவில்லை. மெரினாவில் கருணாநிதிக்கு இடம் கொடுத்த தீர்ப்புக்கு எதிராக அரசு மேல்முறையீடு செய்திருந்தால் நானே போராட்டத்தில் இறங்கியிருப்பேன்.

இந்த இடத்தில் இதை சொல்லியே ஆக வேண்டும். கருணாநிதியின் இறுதிச் சடங்கிற்கு ராகுல் காந்தி, பல மாநில முதல்வர்கள் என ஒட்டு மொத்த இந்தியாவே வந்த நிலையில் முதலமைச்சர் வர வேண்டாமா?. அமைச்சர்கள் வந்திருக்க வேண்டாமா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# அ.தி.மு.க. செயற்குழு 20 ஆம் திகதி கூடுகிறது; முக்கிய முடிவுகள் எடுக்க வாய்ப்பு!

பரபரப்பான தமிழக அரசியல் சூழலில் எதிர்வரும் 20ஆம் திகதி அ.தி.மு.க. செயற்குழு அக்கட்சி தலைமை அலுவலகத்தில் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி சென்னை ராயப்பேட்டையில் உள்ள அக்கட்சி அலுவலகத்தில் மாலை 4 மணிக்கு கூடும்




என அறிவிக்கப்பட்டுள்ளது. செயற்குழு உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கட்சி அவைத்தலைவர் மதுசூதனன் தலைமையில் நடக்கும் இந்தக் கூட்டத்தில், முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்கின்றனர். அடுத்தாண்டு நடக்க உள்ள நாடாளுமன்றத் தேர்தல், தற்போதைய அரசியல் சூழல் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

# கவலையின்றி மக்கள் வசிக்கும் நகரங்களில் சென்னைக்கு 14 ஆவது இடம்; புனே முதலிடம்!

சென்னை, ஓக.15

மக்கள் கவலையின்றி வசிக்கும் சிறந்த நகரமாக மராட்டிய மாநிலத்தின் புனே முதலிடம் பிடித்துள்ளது. சென்னை நகருக்கு 14 ஆவது இடம் கிடைத்துள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் சார்பில் ஆண்டுதோறும் கவலையும், நெருக்கடியும் இன்றி மக்கள் வசிக்கும் நகரங்களின் பட்டியலை தயாரித்து வெளியிட்டு வருகிறது. சிறந்த நிர்வாகம், சமூக நிறுவனங்கள், பொருளாதார நிலை மற்றும் மக்களின் வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த பட்டியல் தயாரிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான போட்டியில் கொல்கத்தா தவிர நாட்டின் 111 நகரங்கள் கலந்து கொண்டன.

இந்த நகரங்களின் வரிசை பட்டியலை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி டெல்லியில் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதில் மக்கள் கவலையின்றி வசிக்கும் சிறந்த நகரமாக மராட்டிய மாநிலத்தின் புனே முதலிடம் பிடித்தது. நவி மும்பைக்கு 2 ஆவது இடம் கிடைத்தது. நாட்டின் வர்த்தக தலைநகரான மும்பை 3 ஆவது இடத்தைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து திருப்பதி, சண்டிகார், தானே, ராய்ப்பூர், இந்தூர், விஜயவாடா, போபால் ஆகியவை முறையே 4 முதல் 10 ஆவது இடங்களை பிடித்தன. சென்னை நகருக்கு இதில் 14 ஆவது இடம் கிடைத்தது. இந்தியாவின் தேசிய தலைநகரான டெல்லி இந்த பட்டியலில் 65 ஆவது இடத்தையே பிடித்தது.

# 36 ஆண்டுகள் பாக்.சிறையில் வாடிய இந்தியர் 68 வயதில் நாடு திரும்பினார்!

## வாகா எல்லையில் கட்டித் தழுவி வரவேற்றனர் உறவினர்கள்!!



இஸ்லாமாபாத், ஓக.15

பாகிஸ்தான் நாட்டின் லாகூர் மத்திய சிறையில் 36 ஆண்டுகள் கைதியாக அடைத்து வைக்கப்பட்டிருந்த இந்தியர் விடுதலை செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

பாகிஸ்தான் நாட்டின் சுதந்திர தினத்தையொட்டி அந்நாட்டின் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 26 மீனவர்கள் உட்பட 29 கைதிகளை நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் அரசு நேற்று முன்தினம் விடுதலை செய்தது.

அவர்கள் நேற்று இந்திய எல்லைப்பகுதியான அட்டாரி – வாகா எல்லைப்பகுதிக்கு பஸ் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

விடுதலை ஆனவர்களில் ஒருவரான கஜானந்த் சர்மா கடந்த 36 ஆண்டுகளுக்கு முன்னர் ராஜஸ்தான் மாநில தலைநகர் ஜெய்ப்பூரில் இருந்து திடீரென்று தனது 32 வயதில் காணா மல் போனார்.

அவரது குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பல இடங்களில் தேடியும் கஜானந்த் சர்மாவை பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை. பின்னர், அவர் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என பல ஆண்டுகள் கழித்து குடும்பத்தாருக்கு தகவல் கிடைத்தது.

வாழ்நாளில் இனி ஒரு முறையாவது தனது கணவரின் முகத்தை காண வேண்டும் என்ற ஆவலுடனும், ஏக்கத்துடனும் காணாமல் போவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட கஜானந்த் சர்மாவின் பழைய புகைப் படத்துடன் அவரது மனைவி மக்னி தேவி காலம் கடத்தி வந்தார்.

இந்நிலையில், பாகிஸ்தானில் இருந்து நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட 29 கைதிகளில் ஒருவராக லாகூர் மத்திய சிறையில் 36 ஆண்டுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த கஜானந்த் சர்மா நேற்று இந்தியாவுக்குத் திரும்பினார்.

தற்போது 68 வயது முதியவராக இருக்கும் கஜானந்த் சர்மாவை அட்டாரி – வாகா எல்லைப்பகுதியில் அவரது குடும்பத்தினர் மகிழ்ச்சியுடனும், நெகிழ்ச்சியுடன் கட்டித்தழுவி வரவேற்றனர்.

# இந்தியாவில் பருவ மழை காலத்தில் 7 மாநிலங்களில் 774 பேர் பலி; கேரளா வெள்ளத்தால் பலியானோர் எண்ணிக்கை 187 ஆக உயர்வு!

இந்தியாவில் இந்த பருவ மழை காலத்தில் இதுவரை 7 மாநிலங்களில் 774 பேர் மழை வெள்ள ம் காரணமாக பலியாகி உள்ளனர். இதில் அதிகபட்சமாக கேரளாவில் 187 பேர் இறந்துள்ளனர்.

கேரளா மாநிலத்தில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவு மழை பெய்துவருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மழை சற்று குறைந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் மீண்டும் பெய்யத் தொடங்கி உள்ளது.

வடமேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதியால் மழை பெய்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மீனவர்கள் கடலுக்கு போக வேண்டாம் என்று புதிய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சம் பேர் தங்கள் வீடுகளில் இருந்து வேறு இடங்களுக்கும், நிவாரண முகாம்களுக்கும் குடிபெயர்ந்துள்ளனர்.

10 கம்பெனி ராணுவத்தினர்,





சென்னை ரெஜிமென்டை சேர்ந்த ஒரு குழுவினர், கப்பல் படை, விமானப்படை, தேசிய பேரிடர் மீட்பு படை ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்கள் தீவிர மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ளனர். கோழிக் கோடு, இடுக்கி, மலப்புரம், கண்ணூர், வயநாடு ஆகிய பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இந்த மீட்பு பணிகள் நடைபெறுகின்றன.

வெள்ளம் பாதித்த பகுதிகளை உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் பார்வையிட்டு உடனடி நிவாரணமாக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்.

26 ஆண்டுகளுக்கு பிறகு திறக்கப்பட்ட இடுக்கி அணையில் இருந்து நேற்றுமுன்தினமும் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

சபரிமலை பகுதியில் பெய்து வரும் மழையால் சபரிமலையப்பன் கோவிலுக்கும் பக்தர்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது ஆவணி மாத பிறப்பையொட்டி நடை திறப்பது வழக்கம். பம்பையில் வெள்ளம் அபாய அளவை தாண்டி ஓடுகிறது. பம்பையில் உள்ள ஹோட்டல்கள், தங்கும் விடுதி, கடைகள் என அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பம்பை நதி மீது உள்ள பாலத்தை மூழ்கடித்தபடி வெள்ளம் போகிறது. இதனால் அந்த பாலத்தை கடந்து செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு பக்தர்கள் யாரும் தற்போது வர வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய அவசரகால செயல்பாட்டு மையம் இந்தியாவில் 7 மாநிலங்களில் இந்த ஆண்டு பருவமழை காலத்தில் மழை மற்றும் வெள்ளத்தால் இதுவரை ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் வருமாறு: –

கேரளாவில் அதிகபட்சமாக இந்த பருவமழை காலத்தில் இதுவரை அதிகபட்சமாக 187 பேர் இறந்துள்ளனர். உத்தரபிரதேசத்தில் 171 பேரும், மேற்கு வங்காளத்தில் 170 பேரும், மராட்டியத்தில் 139 பேரும், குஜராத்தில் 52 பேரும், அசாமில் 45 பேரும், நாகாலாந்தில் 10 பேரும் இறந்துள்ளனர்.

கேரளாவில் 27 பேரும், மேற்குவங்காளத்தில் 22 பேரும் மாயமாகி உள்ளனர். மொத்தம் 245 பேர் காயம் அடைந்துள்ளனர். மராட்டி யத்தில் 26 மாவட்டங்களும், அசாமில் 23, மேற்குவங்காளத்தில் 22, கேரளாவில் 14, உத்தர பிரதேசத்தில் 12, நாகாலாந்தில் 11, குஜராத்தில் 10 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 27,552 ஹெக்டேரில் பயிர்கள் நாசமாகியுள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுயாதீனமாகச் செயற்படுவது குறித்து தீர்மானிக்க பீரிஸ் தலைமையில் குழு

கொழும்பு, ஓக.15

நாடாளுமன்றில் சுயாதீன மாகச் செயற்படுவது தொடர்பில் தீர்மானிப்பதற்காக கூட்டு எதிர் கட்சியினால் குழுவொன்று நிய மிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் சுயாதீன மாக செயற்படுவதா? இல் லையா? என்பது தொடர்பில் ஆராயும் கூட்டு எதிர்க்கட்சியின் கட்சி தலைவர்கள் கூட்டம் நேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெற்றது.

இதன்போதே முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலை மையில் இந்த குழு நியமிக்கப் பட்டுள்ளது.

மேலும், நேற்றைய கூட்டத் தின் போது கூட்டு எதிர்க்கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர் பில் ஆராயப்பட்டிருந்தன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், மாகாண சபை தேர்தல் தொடர்பிலும் இந்தக் ஜட்டத்தில் பேசப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. எனினும் அந்த தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை.

## பெண் கைதிகள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டனர்

வெலிக்கடை சிறைச்சாலை யில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண் கைதிகள் நேற்று மாலை யுடன் தமது ஆர்ப்பாட்டத்தை கைவிட்டுள்ளதாக நீதியமைச்சு கூறியுள்ளது.

நீதியமைச்சின் அதிகாரி களுடன் நேற்று மாலை இடம் பெற்ற பேச்சை அடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள் ளது.

தங்களின் வழக்கு விசா ரணைகளைத் துரிதப்படுத்தி, பிணை வழங்குமாறும், சிறைச் சாலைக்குள் வசதிகளை அதி கரிக்குமாறும் கோரி பெண் சிறைக் கைதிகள் சிலர் வெலிக் கடை சிறைச்சாலையின் கூரை மீதேறி கடந்த திங்கட்கிழமை காலை முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

### மஹிந்தாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் ஆஜராக வேண்டும் என, சி.ஐ.டியின் தலைவரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன கையொப்பமிட்ட எழுத்து மூல கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டது.

கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி இரவு கீத்நோயார் கடத்தப்பட்டு கடுமை யாகத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அமல் கருணா சேகர உட்பட இராணுவ வீரர்கள் 8 பேர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பேச்சாளர் பிரிகேடி யர் சுமித் அத்தப்பத்து இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பிலான பேச்சுக் கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரின் கட்டுப் பாட்டிலுள்ள அரச மற்றும் பொது மக்களின் 522 ஏக்கர் காணி களை விடுவிப்பதற்கான தீர் மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மேலும் 400 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான அனுமதி கடந்த வாரம் வழங் கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இராணுவத்தி னர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி வடக்கு – கிழக்கில் தொடர்போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

### மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பணிகள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை முதல் எதிர் வரும் 20ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மன்னார் நகர நுழைவாயி லில் அமைந்திருந்த 'லங்கா சதொச' விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு புதிய கட்ட டத்தை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அங்கு அகழ்வு செய்யப்பட்ட மண் தனி யாருக்கு விற்பனை செய்யப்பட் டது.

இவ்வாறு விற்பனை செய் யப்பட்ட மண்ணில் மனித எச் சங்கள் காணப்பட்ட நிலையில், இந்த விடயம் பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சதொச வளாகத்தில் மண்ணை அகழும் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில், அந்த பணிகள் நேற்று முன் தினம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டன.

இதனைத்தொடர்ந்து, 'லங்கா சதொச' விற்பனை நிலையத் தின் கட்டுமானப்பணிகள் முழுமை யாக நிறுத்தப்பட்டு மனித எலும்புக்கூடுகள் அகழ்வுப் பணி கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்தன.

நேற்று முன் தினம் வரை 52 நாள்கள் அகழ்வுப்பணிகள் இடம் பெற்றமையோடு 66 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டதுடன், அவற்றில் 56 மனித எலும்புக்கூடுகள் வெளியில் எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நேற்று முன் தினம் முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வரை அகழ் வுப் பணிகள் இடை நிறுத்தப்பட் டுள்ளன. அகழ்வுப் பணிகள் எதற்காக இடை நிறுத்தப்பட்டன என்பது குறித்து காரணங்கள் எதுவும் வெளியாகவில்லை. (ஐ)

### ரவிராஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவிராஜ் கொலை, கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப் பட்டமை உட்பட பல சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த வரான நேவி சம்பத் கைது செய் யப்பட்டுள்ளார்.

இலங்கைக் குற்றப்புலனாய் வுத்திணைக்களத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த பிரசாத் சந்தன ஹெட் டியாராச்சி என அழைக்கப்படும் நேவி சம்பத் கைது செய்யப்பட் டுள்ளார் என குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கூறினர்.

ரவிராஜ் கொலை, கொழும் பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத் தப்பட்டமை உட்பட பல சம்பவங் கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த நேவி சம்பத் தலைமறைவாகி யிருந்தமையைத் தொடர்ந்து நீதி மன்றம் அவருக்கு எதிராகப் பிடி யாணை பிறப்பித்திருந்தது.

இதனை தொடர்ந்து நேவி சம்பத்தைக் கைதுசெய்வதற் காக பொதுமக்களின் உதவியை நாடிய குற்றப்புலனாய்வுப் பிரி வினர் அவரைச் சில தரப்புகள் மறைத்து வைத்துள்ளன எனவும் தெரிவித்திருந்தனர்.

அவரை மறைத்து வைத் துள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வும் அவர்கள் எச்சரித்தனர்.

இந்நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு பிரிவி னரால் கைது செய்யப்பட்ட, நேவி சம்பத்தை இன்று வரை தடுப் புக்காவலில் வைத்து விசா ரிப் பதற்கு நீதிமன்றம் அனுமதிவழங் கியுள்ளது.

அவர் கொழும்பு மேலதிக நீதி வான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டார். இதன் போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது. (ஐ)

### செஞ்சோலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலை இடம்பெற்ற வள்ளிபுனம் பகுதியில் படு கொலை செய்யப்பட்டவர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப் பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட நினைவிடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உயிரிழந் தவர்களின் உறவுகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப் பினரும் கலந்துகொண்டனர்.(ஐ)

### நாயாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மீனவர்களின் படகுகள், வலைகள், வாடிகள் என்பன தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய் யப்பட்டுள்ளனர் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நேற்று பிற் பகல் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் கூறினர்.

கைதாகிய சந்தேக நபர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர் கள் என்று தெரியவந்துள்ளது.

நாயாறுப் பகுதியில் அமைக் கப்பட்டிருந்த தமிழ் மீனவர்களின் வாடிகள் பல நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டிருந்தன. இதனால் பல கோடி ரூபா பெறு மதியான மீன்பிடி உபகரணங் கள் தீயில் எரிந்து நாசமாகி யிருந்தன.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண் டனர். அதன் அடிப்படையிலேயே இந்த மூவரும் கைது செய்யப் பட்டுள்ளனர். (ஐ)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு கள் நடைபெற்றன.

பல்கலைக்கழக கல்விசார், சாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு உயிரிழந்த மாணவி களுக்கு அஞ் சலி செலுத்தினர்.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி காலை 6 மணி இலங்கை அரச வான்படையின் இரண்டு கிபிர் விமானங்கள் செஞ்சோலை சிறுவர் இல்ல மாணவிகளை இலக்கு வைத்து குண்டுத்தாக்குதலை நடத்தின.

61 மாணவிகள் கொல்லப் பட்டனர்; 100 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்தி ருந்தனர். அன்று இந்த சம்பவம் தமிழர் தாயகம் – புலம் பெயர் தேசமெங்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. (ஐ)

### தூக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தூக்குத் தண்டனை தொடர் பில் கத்தோலிக்கத் திருச்சபை யின் மத இலக்கண நூலின் 2267 ஆம் சரத்தில் மேற்கொள் ளப்பட்டுள்ள திருத்தத்திற்கு பரி சுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் அனு மதிவழங்கியுள்ளார் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன், தூக்குத் தண் டனை விதிக்கப்படும் போது தனி நபரின் உரிமை மீறப்படுவதாக வும், இது தனிப்பட்ட கௌரவத் திற்கு எதிரான தாக்குதல் என்ப தாலும் தூக்குத் தண்டனையை அனுமதிக்க முடியாது எனப் பாப் பரசர் பிரான்ஸிஸ் தெரிவித்துள் ளார் எனக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கடுமையான சந்தர்ப்பங்களிலும் சமாதா னத் தையும், பாதுகாப்பையும் பேண வேண்டிய சந்தர்ப்பங்களிலும் மரண தண்டனையை நடை முறைப்படுத்துவது தவறில்லை எனக் கொழும்பு பேராயர் கர்தி னால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (ஐ)

### தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தின் காரண மாக எமது பிரதேசத்தில் பல்லா யிரக்கணக்கான மாணவர்கள் கல்வி நிலையில் பின்தள்ளப் பட்டனர். அவர்களின் குடும்பங் களும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின.

வீடு, வாசல் சொத்துக்களை இழந்து தொழில் முயற்சிகளின்றி அல்லற்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் அவர்களுக்கான விரைந்த உதவிகள் நேரடியான உறவுகளின் மூலமாகவும் புலம் பெயர் அமைப்புக்களின் ஊடாக வும் வழங்கப்பட்டன. அந்த உதவிகள் அவர்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுகளை ஈடு கொடுக்கக்கூடிய அளவில்தான் அமைந்துள்ளன.

அத்துடன், இவ்வாறான உதவிகள் நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து வழங்கப்படமுடியா தவை. இவ்வாறான உதவிகளை வெளிநாடுகளில் இருந்து எமது புலம்பெயர் உறவுகள் தொடர்ந்து வழங்கி வருகின்றபோதும் இங் கிருக்கும் அதன் பயனாளிகள் சுயமாகப் பொருள் தேடும் தொழில் முயற்சியை முழுமையாகக் கைவிட்டு எந்த நேரமும் மற் றையவர்களின் கைகளை எதிர் பார்க்கும் ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள். இது வருந்தத்தக்க செயல்.

இலங்கை சுதந்திரம் பெற்ற தினத்தில் இருந்து இன்று வரை எமது தமிழ்த் தலைவர்களின் தூரநோக்கற்ற சிந்தனைகளும், இறுமாப்புத் தன்மையும், அகந் தையும், சமூக வேறுபாட்டுக் கொள்கைகளும் மற்றும் இன் னோரன்ன காரணிகளே நாம் தொடர்ச்சியாக அரசியல் பின் னடைவுகளைச் சந்திப்பதற்கான ஏதுக்களாக இருந்து வந்துள் ளமையை நாம் காண்கின்றோம்.

இந்த நிலையில், நாம் எமது இருப்புக்களை உறுதிசெய்து எம் மீது திணிக்கப்படுகின்ற அரசி யல் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து எமது மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் அதற்குரிய கல்வி நிலையை நாம் பெற்றுக்கொள்ள முனைப்பு டன் செயலாற்ற வேண்டும் – என் றார். (ஐ)

### பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும்மினி விகாரை விகாராபதி யைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட பிரதமர், வழிபாட்டிலும் கலந்து கொண்டார்.

இன்று புதன்கிழமை மடுத் திருவிழாவிலும் பங்கேற்க வுள்ளார்.

இதன்போது அவர் மன்னார் ஆயர், மறைமாவட்ட குருக்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்துப் பேசவுள்ளார் எனவும் தெரி விக்கப்படுகின்றது.

அத்துடன், மன்னாரில் முன் னெடுக்கப்பட்டு வரும் சில அபி விருத்தி பணிகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பார்வை யிடவுள்ளார். (ஐ)



### முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

இந்தத் தகவலை அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள் ளார்.

முல்லைத்தீவு – நாயாறுப் பகுதியில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களின் 8 வாடி களுக்கு நேற்றுமுன்தினம் தீ வைக்கப்பட்ட நிலையில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் இது தொடர் பில் நேற்று அமைச்சர் மனோ கணேசனால், அமைச்சரவை யின் அவதானத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதன்போதே ஜனாதி பதி இந்த உறுமொழியை வழங்கி னார் என அமைச்சர் மனோ தெரிவித்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப் பிக்குமாறு, வட பிராந்திய பொலிஸ் அதிகாரிக்கு உத்தர விடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சுப்பர் கோபா உதைபந்து கிண்ணம்; வாகை சூடியது பார்சிலோனா அணி



ஸ்பெயினில் நடைபெறும் மிகப் பிரபலமான உதைபந்து தொடர்களில் சுப்பர் கோபா உதைபந்து கிண்ணமும் ஒன்று.

கடந்த 1982ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுவரும் இத்தொடர், சற்று வித்தியாசமானதும், பிரபலமானதுமான உதைபந்து தொடராகும்.

ஸ்பெயினில் நடைபெறும் பிரபல உதைபந்து கழக தொடர்களான லா லிகா உதைபந்து தொடர் மற்றும் கோபா டெல் ரே உதைபந்து தொடர்களில், சம்பியன் பட்டம் வெல்லும் அணிகள், ஒரேயொரு போட்டிக்கொண்ட சுப்பர் கோபா கிண்ண உதைபந்து போட்டியில், மகுடத்துக்காக முட்டி மோதும்.

அந்த வகையில், 2017- 2018 பருவகாலத்தில் சம்பியன் பட்டம் வென்ற அணியும், 2017 - 2018 பருவகாலத்தில் கோபா டெல் ரே உதைபந்து தொடரில் சம்பியன் பட்டம் வென்ற அணியும் நடப்பு ஆண்டுக்காக சுப்பர் கோபா கிண்ணப் போட்டியில் பலப்பரீட்சை நடத்த வேண்டும்.

ஆனால், இந்த இரு தொடர்களிலுமே பார்சிலோனா அணியே மகுடம் சூடியது. இதனால் கோபா டெல் ரே உதைபந்து தொடரில் இரண்டாம் இடம் பிடித்த அணி, செவில்லா அணி, சுப்பர் கோபா கிண்ண போட்டியில் பார்சிலோனா அணியுடன் பலப்பரீட்சை நடத்தியது.

2017-2018 பருவகாலத்தின் கோபா டெல் ரே கால்பந்து தொடரில் சம்பியன் பட்டத்துக்கான இறுதிப்போட்டியில், பார்சிலோனா அணியிடம், செவில்லா அணி 0:5 என்ற கோல்கள் கணக்கில் படுதோல்வியடைந்தது நினைவுக்கூரத்தக்கது.

இரு அணிகளும் முட்டி மோதிக் கொண்ட இப்போட்டியில், இரு அணி வீரர்களும் ஆக்ரோஷமாக விளையாடினர்.

போட்டியின் 9ஆவது நிமிடத்தில் செவில்லா அணியின் நட்சத்திர வீரரான பப்லோ சரபியா முதல் கோலை அடித்து பார்சிலோனா அணிக்கு அதிர்ச்சி கொடுத்தார். இதன் பிறகு பதில் கோல் போட பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர்கள் கடுமையாக போராடினர். ஆனால் அதற்கான பலன் கடுமையான போராட்டத்திற்கு பிறகு 42ஆவது நிமிடத்தில் கிட்டியது.

பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான ஜெராட் பிகே அணிக்காக முதல் கோலை அடித்து, கோல் கணக்கை 1:1 என சமநிலைப் படுத்தினார். இதன்பிறகு இரு அணிகளாலும் பதில் கோல் போட முடியாததன் காரணமாக முற்பாதியில் கோல் கணக்கு 1:1 என சமநிலை பெற்றது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதி நேரத்தில், முன்னிலை கோலை புகுத்த இரு அணி வீரர்களும் முட்டி மோதிக்கொண்டனர்.

இதன்போது இரு அணி வீரர்களின் பல கோல் போடும் வாய்ப்புகள் முறியடிக்கப்பட்டன. ஆனால் சோர்ந்து போகாது, விடாது முயற்சி செய்த பார்சிலோனா அணிக்கு 78ஆவது நிமிடத்தில் அதிர்ஷ்டம் கிடைத்தது.

அந்த அணியின் வீரரான ஓஸ்மானே டெம்பெலே இரண்டாவது கோலை புகுத்தி அணியை 2:1 என முன்னிலைப் படுத்தினார்.

மேற்கொண்டு இரு அணிகளாலும் முயற்சித்தும் கோல் போட முடியவில்லை. இதனால் போட்டியின் இறுதியில் பார்சிலோனா அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று வாகை சூடியது. இந்த தொடரில், இது பார்சிலோனா அணியின் 13ஆவது சம்பியன் பட்டமாகும்.

அத்தோடு, இதன் மூலம் பார்சிலோனா அணியின் புகழ் பூத்த வீரரான லியோனல் மெஸ்ஸி, தனது 33ஆவது சம்பியன் கிண்ணத்தை பார்சிலோனா அணிக்காக பரிசளித்தார். இதன்மூலம் பார்சிலோனா அணிக்கு அதிக சாம்பியன் பட்டம் வாங்கிக் கொடுத்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார். இதற்கு முன் அணித்தலைவராக இருந்த ஆந்ரே இனியஸ்டா 32 கிண்ணங்களை வென்றுக் கொடுத்துள்ளார்.

# ஆண்டி முர்ரே அதிர்ச்சி தோல்வி

சின்சினாட்டி மாஸ்டஸ் ரென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில், உலகின் முன்னாள் முதல் நிலை வீரரான பிரித்தானியாவின் ஆண்டி முர்ரே அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.

முதல் சுற்றுப் போட்டியில், பிரித்தானியாவின் ஆண்டி முர்ரே, பிரான்ஸின் லூகாஸ் பியூலியை எதிர்கொண்டார்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியின் முதல் செட்டே, ஆண்டி முர்ரேவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

இப்போட்டியில் ஆண்டி முர்ரே, இலகுவான வெற்றியை பதிவு செய்வார் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும், அவர் முதல் செட்டையே 1:6 என லூகாஸ் பியூலியிடம் இழந்தார்.

இதனைதொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், மீண்டெழுந்த ஆண்டி முர்ரே, 6:1 என செட்டை கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா ஒரு செட்டை கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் சூடுபிடித்தது. இதில் இருவரும் ஆக்ரோஷமாக விளையாடினர்.



ஆனால் மூன்றாவது செட்டில் முன்னணி வீரரான லூகாஸ் பியூலியின் கைகளே ஓங்கியது. இதில் சிறப்பாக விளையாடி லூகாஸ் பியூலி மூன்றாவது செட்டை 6:4 என கைப்பற்றி இரண்டாவது சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தார்.

இரண்டாவது சுற்றுப் போட்டியில், லூகாஸ் பியூலி, ஆர்ஜென்ரீனாவின் லியோனார்டோ மேயருடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளார்.

உபாதையின் பின் மீண்டெழுந்து களம் புகுந்த 31 வயதான ஆண்டி முர்ரே, தற்போது தொடர் தோல்விகளால் கடும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளார்.



# முன்னணி வீரர்களின் ஓய்வால் சிக்கி திணறும் ஸ்பெயின் அணி!

உதைபந்து உலகில் பல முன்னணி வீரர்களை உருவாக்கிய ஸ்பெயின் உதைபந்து அணி, தற்போது முன்னணி வீரர்களின் ஓய்வால் ஆட்டம் காண தொடங்கியுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் ஏந்திய ஸ்பெயின் அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களின் தொடர்ச்சியான ஓய்வினால், தற்போது என்ன செய்வதறியாது, ஸ்பெயின் அணி நிர்வாகம் திகைத்து நிற்கின்றது.

முன்னதாக ரஷ்யாவில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரின் போது, சம்பியன் கிண்ண கனவோடு களமிறங்கிய ஸ்பெயின் அணி, வெளியேற்று சுற்றில், ரஷ்ய அணியை எதிர்கொண்டது. இப்போட்டியில், பெனால்டி ஷூட்அவுட் முறையில் ரஷ்ய அணியிடம் 3:4 என்ற கோல்கள் கணக்கில் ஸ்பெயின் அணி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

அன்றிலிருந்து தொடங்கப்பட்ட விமர்சனத்துக்கு ஈடுகொடுக்க முடியாத வீரர்கள், தற்போது ஓய்வை அறிவிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதன் முதல் கணக்கை தொடங்கி வைத்தவர் 34வயதான ஆண்ட்ரஸ் இனியஸ்டா. கடந்த 2010 ஆண்டு ஸ்பெயின் அணி உலகக்கிண்ணம் ஏந்துவதற்கு மிக முக்கிய காரணமாக திகழ்ந்தவர் இவர்.

உலகக்கிண்ண தொடரில், ஸ்பெயின் அணியின் மோசமான தோல்வியின் எதிரொலியால் அணியிலிருந்து முதலாவது வீரராக இவர்தான் விலகினார்.

ஸ்பெயின் அணிக்காக 131 போட்டிகளில் விளையாடி 13 கோல்களை பெற்றுக் கொடுத்த இவர், ஸ்பெயின் அணி உலகக்கிண்ணம் வெல்வதற்கு மிக முக்கிய காரணமாகவும் திகழ்ந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் அவரை தொடர்ந்து, தற்போது இரண்டு முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இது இரசிகர்களுக்கு கடும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ள அதேவேளை, மறுபுறம் அணி நிர்வாகம் இந்த அறிவிப்புக்களால் அதிர்ந்து போயுள்ளது.

இதில் மிக முக்கிய வீரராக அணியின் முன்னணி வீரான டேவிட் சில்வா, சர்வதேச கால்பந்து போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

மத்திய கள வீரரான 32வயதான டேவிட் சில்வா, கடந்த 2010ஆம் ஆண்டு ஸ்பெயின் அணி உலகக் கிண்ணம் ஏந்திய அணியிலும், இடம்பெற்றிருந்தார்.

அத்தோடு, ஐரோப்பிய சம்பியன்ஷிப் தொடரில் 2008 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டம் வென்ற அணியிலும் இடம்பெற்றிருந்தார்.

ஸ்பெயின் அணிக்காக விளையாடியது குறித்து பெருமிதம் அடைகின்றேன். ஓய்வை அறிவிப்பது கடினமானதொரு விடயம் தான் என அவர் உருக்கமாகக் கூறியுள்ளார்.

ஸ்பெயின் அணிக்காக 12 வருடங்கள் விளையாடியுள்ள டேவிட் சில்வா, ஸ்பெயின் அணிக்காக 125 போட்டிகளில் விளையாடி 35 கோல்கள் அடித்துள்ளார்.

இதேபோல் ஸ்பெயின் மற்றொரு நட்சத்திர வீரரான ஜெராட் பிகேவும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஸ்பெயின் அணி உலகக்கிண்ணம் ஏந்திய அணியிலும், கடந்த 2012ஆம் ஆண்டு ஐரோப்பிய சம்பியன்ஷிப் தொடரில் வென்ற அணியிலும் இவர் இடம்பெற்றிருந்தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு அணியில் இணைந்த இவர், இதுவரை 102 போட்டிகள் விளையாடி 5 கோல்கள் அடித்துள்ளார்.

எனினும் இவ் இரண்டு வீரர்களும் தொடர்ந்தும் கழக அணியில் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் டேவிட் சில்வா மென்செஸ்டர் சிட்டி கழக அணிக்காகவும், ஜெராட் பிகே பார்சிலோனா கழக அணிக்காகவும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# செஞ்சோலைப் படுகொலை 12ஆம் ஆண்டு நினைவு; வள்ளிபுனத்தில் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு













## செஞ்சோலை நினைவேந்தல் நேற்று மட்டக்களப்பிலும்



மட்டக்களப்பு, ஓக. 15

செஞ்சோலை படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு மட்டக்களப்பில் நேற்றுத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அதன் மட்டக்களப்பு மாவட்ட தலைமையகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமானப் படை நடத்திய தாக்குதலில் 52 சிறுவர்கள் உட்பட 61 பேர் படுகொலை செய்யப்பட்டனர்; 100 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்த நினைவு நாளையொட்டி மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ரி.சுரேஸ், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜெகநீதன் உட்பட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் நினைவேந்தல் சுடரேற்றப்பட்டு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. (ஐ)

# பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதுமே இராணுவத்தினருக்கு வழங்கப்படா!

## கூறுகிறார் அமைச்சர் நளின் பண்டார



கொழும்பு, ஓக.15

பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் இராணுவத்தினருக்கு வழங்கப்படா எனப் பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.


பொலிஸ் அதிகாரங்களை இராணுவத்தினருக்கு வழங்கி, நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கில் அரசு செயற்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது.


இந்த நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே பிரதியமைச்சர் நளின் பண்டார மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த பொலிஸ் அதிகாரங்கள் முப்படையினருக்கு வழங்கப்படவுள்ளன எனக் கூறுகிறார்.

இந்தக் கருத்தில் எதுவித உண்மையும் கிடையாது. ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் பொலிஸ் அதிகாரங்களை மாத்திரமன்றி இராணுவ அதிகாரங்களையும் முறைகேடாகப் பயன்படுத்தினர். எனினும் தற்போதைய நல்லாட்சி அரசே பொலிஸாருக்கு உரிய அதிகாரங்களை வழங்கியுள்ளது–என்றார். (ஐ)





காரைநகரில் நேற்று மாலை கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக வலந்தலை இலகடி கிராமத்தில் பனைமரம் ஒன்று வீட்டின் மீது விழுந்துள்ளது. செ. நிமலேஸ்வரன் என்பவரது வீடே பனைமரம் விழுந்து சேதமடைந்துள்ளது. இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.